விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 11 வியாழக்கிழமை (25.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 96

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

# இலங்கை அரசுக்கான ஆதரவினை விலக்கிக் கொள்ள இந்தியா திட்டம்?

## மேற்குலகுடன் இணைகின்றது

(புதுடில்லி)

இலங்கை அரசுக்கு எதிரான போர்க் குற்ற விசாரணைகள் விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு இலங்கைக்கு ஆதரவான நாடுகள் உட்பட பன்னாட்டு சமூகம் ஒரு வரையறைக்கு அப்பால் இலங்கைக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை எனவும் இந்தியா, சீனா உட்பட இலங்கைக்கு நெருக்கமான நாடுகளும் மேற்குலகைப் பகைக்காமல் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கும் சாத்தியக் கூறுகளே காணப்படுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் யோசனைகளுக்கு பொன்சேகாவின் கட்சி எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆலோசனைக் குழுவை அமைப்பது என்ற பான் கீ மூனின் திட்டத்தை நாம் எதிர்ப்பதாக ஜனநாயக தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இலங்கை விவகாரத்தில் ஐ.நா. தலையிடுவதைத் தாம் ஆதரிக்கப் போவதில்லை என ஜனநாயக தேசிய முன்னணியின் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் தலையீடு இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அலுவலகம் செல்லும் தமிழர்களுக்கு அச்சுறுத்தல்?

(கொழும்பு)

ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் அலுவலகத்தின் நுழைவாயிலில் சிங்களவர்கள் கூடி நின்று அங்கு செல்லும் தமிழர்களை நிழற்படம் எடுத்து அச்சுறுத்துவதாகத் தெரிய வந்துள்ளது.

தமிழர் மனித உரிமைகள் நடுவகத்தின் பொதுச் செயலாளர் கிருபாகரன் இது குறித்த தகவல் வெளியிட்டார்.

இம் மாதம் 12 ஆம் திகதி ஐக்கியநாடுகள் மனித உரிமைச் சபையின் அமர்வில் கலந்து கொள்ளத் தான் (20 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத் தேர்தல் 2010 க்கான தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகின்றது. இன்றும் நாளையும் நடைபெறும் இந்த வாக்களிப்பைப் பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சாவடி ஒன்றில் இடம்பெறும் வாக்களிப்பைப் போலவே நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாக்களிப்பு நடைபெறும் சகல அரச அலுவலகங்களும் இன்று 25 ஆம் திகதியும் நாளை 26 ஆம் திகதியும் தேர்தல் வாக்குச் சாவடிகள் போன்று இயங்கும் எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் தெரிவத்தாட்சி அலுவலராகச் செயற்படும் திணைக்களத் தலைவர் மற்றும் அவரது செயலணியினர், வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தவிர வேறு எவரும் வாக்களிப்பு நிலையத்தினுள் இருக்க (19 ஆம் பக்கம் பார்க்க)

## லியாம் பொக்ஸின் பயணத்துக்கு இலங்கை நிதியுதவி வழங்கவில்லை

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

லியாம் பொக்ஸின் இலங்கை விஜயங்களுக்கு நிதி அனுசரணை வழங்கப்படவில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடகமான பி.பி.சி. உள்ளிட்ட சில ஊடகங்களில் லியாம் பொக்ஸின் இலங்கை விஜயத்திற்கு அரசாங்கம் நிதி அனுசரணை வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இலங்கை அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## எனது தீர்ப்பு தவறானது என்றால் மகிந்தவை விடுதலை செய்ததும் தவறு

### முன்னாள் நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

தான் பிரதம நீதியரசராக பணியாற்றிய காலத்தில் வழங்கிய வழக்குத் தீர்ப்புக்கள் அனைத்தும் தவறானது என அரச ஊடகங்கள் குற்றஞ்சுமத்துமானால் சுனாமி நிவாரண நிதி மோசடி சம்பந்தமாக அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை உயர் நீதிமன்றம் விடுவித்ததும் தவறானதாக இருக்கும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஜெயவர்த்தன கேந்திர நிலையத்தில் நடைபெற்ற (19 ஆம் பக்கம் பார்க்க)







நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாலஸ்தீனத்துக்கு இலங்கை யோசனை

(கொழும்பு)

அர்த்தபூர்வமான இணக்கப்பாட்டின் மூலமே இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என இலங்கை அறிவித்துள்ளது.

சமாதான முனைப்புக்களைத் தொடர இரு தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமென இலங்கை தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தில் தற்போது நிலவி வரும் மனிதாபிமான நிலைமை குறித்து இலங்கை உன்னிப்பாக கவனம் செலுத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

ஐக்கிய தேசியக் கட்சி X

விளையாட்டுதுறையில் ஈடுபாடுள்ள இளைஞர்களை சர்வதேசமட்டத்திற்கு உயர்த்த தியாகராஜா மகேஸ்வரன் வழியில் தம்பி தியாகராஜா துவாரகேஸ்வரன்.



வெற்றி இலக்கம்

1



மக்கள் துயர் துடைக்க
மீண்டும் ஒரு மகேஸ்வரன்
தியாகராஜா துவாரகேஸ்வரன்

(சி-4815)

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் கொண்டு ஒற்றுமைக்காக...



அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B
(சிரேஷ்ட சட்டத்தரணி,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)

X 1

அன்புள்ள
தபால் மூல வாக்காளப் பெருமக்களே!



- இழந்த கல்வியை மீட்டெடுக்க
- ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண
- மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தி அங்கு கல்விவிருத்தியைக் கட்டியெழுப்ப
- அனைத்து அரச ஊழியர்களதும் நலன்பேண

ஆசிரியராக, அதிபராக, வட்டாரக்கல்வி அதிகாரியாக, வலயக்கல்விப் பணிப்பாளராக, மாவட்டக் கல்விப்பணிப்பாளராக, மாகாணக் கல்விப்பணிப்பாளராக கல்வியமைச்சின் முதுநிலை மதியுரைஞராக 44 வருடங்கள் அரசசேவையில் பணிபுரிந்து தமிழ் சமூகத்துக்கு அரும்பணியாற்றிய பட்டறிவுச் செம்மல் *கலாநிதி சு.நா. தணிகாசலம்பிள்ளை* அவர்களுக்கு வாக்களியுங்கள்.

(சி-4804)

சுயேட்சைக்குழு-10 X

# வரையறுக்கப்பட்ட ஜனாதிபதியாக செயற்பட ஒருபோதும் விரும்பவில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வசனங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட ஜனாதிபதியாக செயற்பட தாம் ஒருபோதும் தயாரில்லையென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட தொழிற்சங்க உறுப்பினர்களுடன் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டை ஒருங்கிணைப்பதாக மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றியது போன்றே அபிவிருத்தி நாடாக இலங்கையை கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுமென்றும் கூறினார்.

எதிர்கால சந்ததிக்காக நாட்டைமேம்படுத்தும் பொருட்டு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளோம் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ச-9)

## கோப்பாய் பிரதேச செயலக மகளிர் தின விழா

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலக மகளிர் தின விழா உதவி பிரதேச செயலர் செல்வி க.பிறேமினி தலைமையில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் நளினி வரதலிங்கம், பேராசிரியர் வி.பி.சிவநாதன், கரிதாஸ் கியூடெக் பெண்கள் அபிவிருத்தி பிரிவு இணைப்பாளர் மேரிலலிதாவிக்டர், சிறுவர் பாதுகாப்பு நிதியதிட்ட உத்தியோகஸ்தர் ஜெரோமியஸ்செந்தூரன், பிரதேசசெயலர் சீ.ஏ.மோகன் ராஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ச)

## தேவை

யாழ். நகரில் இயங்கும் ஜவுளி நிறுவனம் ஒன்றுக்கு ஆண், பெண் பயிலுனர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு எண்: 077 2850753 (952)

## தேவை

சுகாதார சஞ்சிகை விற்பனை செய்வதற்கு முகவர் தேவை. துடிப்பும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்புக்கு: 0776203797 (949)

## விற்பனைக்கு

பாவித்த P IV கணனிகள் (07), Computer Cabins, Weel Chairs (10) என்பன உடன்விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0213219096
0214921803

## வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடி நிற்கும் துடிப்பான இளைஞர், யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் குடாநாட்டில் சகல பகுதிகளிலும் காப்புறுதி ஆலோசகராக யாழ். மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றி வரும் அரச காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரிய வாய்ப்பு.

### வேலை பற்றி

- 1 மாத பயிற்சி காலத்தை உடையது.
- பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### அடிப்படைத் தகைமை

- G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடசித்தி
- 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிரக் கோவையை (BIO DATA) 05.04.2010 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல.942
மே/பா.வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (942)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தக கண்காட்சி 2010

இடம்: யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
யாழ். மத்திய கல்லூரி

காலம்: 27, 28,29 மார்ச் 2010 (சனி, ஞாயிறு, திங்கள்)
காலை 9 மணிமுதல் மாலை 8 மணிவரை.

அனுமதி இலவசம்

அனைவரையும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிடுவதோடு விசேட கழிவு விலையில் பொருட்களை கொள்முதல் செய்யும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மூன்று தினங்களும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். (சி-4755)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவ கால அபிஷேக ஆராதனை

மேற்படி உற்சவகாலம் 29.03.2010ஆம் திகதி தொடக்கம் 15.04.2010ஆம் திகதிவரை நடைபெற உள்ளது. அத்தருணம் ஆலய சுற்றாடலில் கடைகள் நடாத்தவிரும்புவோர் 27.03.2010 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலயத்திற்கு வருகைதந்து நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு, தங்களுக்கென ஒதுக்கப்படும் இடத்திற்குரிய வாடகைப் பணத்தை முழுமையாக செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

-மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா

(சி-4778)

# இன்று ஒரு தகவல்

## பரம்பரையா? சூழ்நிலையா?

ஒரு மனிதன் நல்லவனாக இருப்பதற்கும் கெட்டவனாக இருப்பதற்கும் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

பரம்பரைக்குணமா? அல்லது வளர்ந்த சூழ்நிலையா?

சில பையன்களைப் பார்த்தால் உடனே "நீ இன்னாருடைய மகனா?" என்று கேட்கிறோம். அவனும் "ஆமாம்" என்கிறான். இது எப்படி?

முகச்சாயல் அதைக் காட்டிக் கொடுக்கிறது. ஒரு பையன் நடந்து போகும் முறை, அவனுடைய உடல்வாகு இதையெல்லாம் வைத்துக்கூட அவன் இன்னாருடைய பிள்ளை தானென்பதை ஓரளவுக்கு யூகிக்க முடிகிறது.

ஒருவருடைய முக அமைப்பு, கண்களின் நிறம், தோலின் நிறம், தலைமுடி, உயரம் இப்படி பல விடயங்களைத் தீர்மானிப்பது அவருடைய பெற்றோரிடமிருந்து பெறப்படுகின்ற மரபுக்கூறுகள் தான்.

இதைத்தான் ஆங்கிலத்தில் 'ஜீன்கள்' என்று சொல்கிறார்கள். உயிரியல் செயல்கள் அமினோ அமிலங்கள், சுரப்பிகள் இவற்றின் செயற்பாடுகளை நிர்ணயம் செய்வதும் இந்த மரபுக் கூறுகள் தான்.

இப்படியெல்லாம் இருப்பதனால் ஒருவருடைய நடத்தைக்கும் பரம்பரைதான் காரணம் என்று ஒரேயடியாக சொல்லிவிட முடியாது. சூழ்நிலையின் முக்கியத்துவம் குறித்தும் பலர் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்... ஒருவருடைய புத்திசாலித்தனம், உணர்ச்சி வசப்படும் தன்மை, கோபம், சுலபமாக நண்பர்களைப் பெறக்கூடிய ஆற்றல், சோர்வுத் தன்மை.

இவையெல்லாம் பெற்றோர்களுடைய வசதி, கல்வி, சூழ்நிலை, வளர்ப்பு முறை என்பவற்றைப் பொறுத்து தான் அமைகிறது என்கிறார்கள்.

அப்பாமாதிரி பிள்ளை நடக்கிறது என்றால் அதற்கு பரம்பரை குணம் காரணமில்லை பார்த்துக் கற்றுக் கொள்வது தான் காரணம் என்பது இவர்களுடைய வாதம்.

கோட்டஸ்மன் என்று ஒரு ஆராய்ச்சியாளர். அவர் என்ன செய்தார் தெரியுமா?

ஒரு தாய் வயிற்றில் பிறந்த இரட்டைக் குழந்தைகளை பிரித்து வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்த்தார். அப்படி வளர்த்தது மூலமாகவே இரண்டு பேருக்கும் மாறுபட்ட குணம் – திறமை இருக்கிறது மாதிரி உருவாக்கிவிட்டாராம்.

அவன் ஒரு மாதிரியும் இவன் ஒரு மாதிரியும் ஆகிவிட்டார்கள்.

வான்டன்பெர்க் என்ற ஆராய்ச்சியாளர் குழந்தைகளை மூன்று வகையாக பிரித்தார். கலகலப்பாக இருக்கிறவர்கள் ஒருவகை. தனிமையாக இருக்க விரும்புகிறவர்கள் ஒருவகை. உணர்ச்சி வசப்படுகிறவர்கள் ஒரு வகை. பாரம்பரியச் செல்வாக்குத்தான் இந்த வகைகளுக்கு காரணம் என்று சொல்கிறார் அவர்.

ஒரு மனிதக்குரங்கை ஒரு குழந்தையுடன் சேர்த்து வளர்த்துப் பார்த்தார்களாம். அந்தக் குரங்கு மிகவும் நேசமாகவும் பாசமாகவும் இருக்கக் கற்றுக் கொண்டதாம். குணத்தை மட்டுமல்ல உடம்பு வாகையைக் கூட சூழ்நிலை மாற்றிவிடும் போலிருக்கிறது.

ஜப்பானியர்களில் உயரம் குறைந்தவர்கள் சிலர் அமெரிக்காவில் குடியேறினார்களாம்.

இரண்டு, மூன்று தலைமுறைக்கு பின்னர் பார்த்தால்.... அந்த ஜப்பான்காரர்கள் மூன்று அங்குலம் உயரமாக வளர்ந்திருந்தார்களாம்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது பரம்பரையை விட சூழ்நிலைதான் அதிக முக்கியத்துவம் பெறுகிறது என்று தோன்றுகிறது. இந்தக்காலத்துப் பையன் தன் அப்பாவிடம் போய் அப்பா என்னைப் பொறுத்தவரைக்கும் பரம்பரையிலும் நம்பிக்கையில்லை சூழ்நிலையிலும் நம்பிக்கையில்லை என்றார்.

எப்படிடா என்று கேட்டார் அப்பா.

ஒரு பையன் கணக்கில் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கியிருக்கிறான். அவனுடைய அப்பா படிக்கும் போது கணக்கில் 6 மார்க் தான் வாங்கினராம். அந்த மாதிரியே இந்த பையனும் இருந்தால் பாஸாகியிருக்கவே முடியாதே என்றான்.

"அதுசரி ....6 மார்க் வாங்கின அந்த அப்பா யாரடா?" என்றார்.

"நீதான்!" என்றான் பையன்.

"எப்படிடா தெரிந்தது" என்றார்.

"அம்மா சொன்னாங்க" என்றான் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். குடாநாட்டில் பாரிய குடிநீர் விநியோக மற்றும் கழிவு அகற்றும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பாரிய நீர் விநியோக மற்றும் கழிவகற்றும் திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இதன்பிரகாரம் 12 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் குடிநீர் விநியோகத் திட்டமும் 8 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் கழிவகற்றும் திட்டமும் இவ்வருடம் அரம்பிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் பளை, கொடிகாமம், பூநகரி, சாவகச்சேரி, நாவற்குழி, கைதடி, கோப்பாய், யாழ். மாநகர சபை, நல்லூர், ஆனைக்கோட்டை, நவாலி, வட்டுக்கோட்டை, அராலி, சண்டிலிப்பாய், மூளாய் மற்றும் தீவுப் பகுதிகளைச் சார்ந்த 5 இலட்சம் மக்கள் பயனடையவுள்ளனர்.

92 கிலோ மீற்றர் நீர் ஏற்றத்தையும் 500 கிலோ மீற்றர் நீர் விநியோகத்தையும் கொண்டிருக்கும் மேற்படி விநியோகத் திட்டத்தின் கீழ் 17 நீர்த் தாங்கிக் கோபுரங்களும் 03 நிலக்கீழ் நீர்த் தொட்டிகளும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நீர் இரணைமடு குளத்திலிருந்து பெறப்படும். இதற்கான நிதி உதவியை இலங்கை அரசும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் பொறுப்பேற்றுள்ளன.

கழிவுகளை அகற்றும் திட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு நிலையங்கள் கடலுக்கு கழிவுகளை வெளியேற்றும் நிலையம் மற்றும் பம்ப் நிலையம் என்பன அமைக்கப்படவுள்ளன.

இத் திட்டங்கள் 2010 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு 2018 அம் வருடம் முடிவடையும்.

இதேநேரம் 515 மில்லியன் ரூபா செலவில் பருத்தித்துறை நீர் விநியோகத் திட்டமும் இவ்வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை பகுதிகளை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்படுகின்ற இத் திட்டத்திற்கு வல்லிபுரம் பகுதியிலிருந்து நிலக்கீழ் நீர் பெறப்படும்.

இதன் மூலம் 50 ஆயிரம் பேர் பயனடையவுள்ளனர். இதற்கான நிதி உதவிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் பொறுப்பேற்றுள்ளன.

மேற்படி திட்டங்களை உரிய முறையில் துரிதகதியில் மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வருவதுடன் இத் திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை பல்வேறு முயற்சிகளுக்கூடாக மேற்கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-6)

## முச்சக்கரவண்டிகளுக்கு பெற்றோல் மானியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி வங்கிகளினூடாக வழங்கப்படும் முச்சக்கர வண்டிகளுக்கான பெற்றோல் மானியம் கடந்த 19 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருவதனால் இதுவரைக்கும் பெற்றுக் கொள்ளாதவர்கள் வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி ஜெயசோதி விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (6-30)

## கண்ணாடி வழங்கல் பிற்போடப்பட்டுள்ளது

இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த யாழ். கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு கொழும்பிலிருந்து கண்ணாடி எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டமையால் இன்று நடைபெறமாட்டாதெனவும் கண்ணாடி வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## வடக்கு -கிழக்கு இளைஞர்களுக்கு அமெரிக்கா புலமைப் பரிசில்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு - கிழக்கில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு அமெரிக்கா அரசாங்கம் 750 புலமைப்பரிசில்கள் வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் அண்மையில் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் வடக்கின் 500 இளைஞர், யுவதிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு தொடர்பான புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது.

இதனை தவிர கிழக்கில் உள்ள 250 இளைஞர், யுவதிகளுக்கு தொழில்நுட்பம் தொடர்பான புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள 39 வீதமான தொழில்நுட்ப ரீதியிலான வெற்றிடங்களை நிரப்பும் வகையிலேயே இந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஓ-6)

## இராசி பலன்

25-03-2010
(பங்குனி 11 , வியாழக்கிழமை)
தசமி முன்னிரவு 7.59 மணிவரை
புனர்பூசம் காலை 7.16 மணிவரை
பூசம் பின்னிரவு 5.40 மணிவரை
இராகுகாலம் 1.45-3.15 மணிவரை
சுபநேரம் 7.45-9.15 மணிவரை
அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | கல்வியில் ஆர்வம், ரோக நிலை, சயன சுகக்குறைவு, பயந்த சுபாவம். |
| இடபம் | இனிய சம்பவம், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், உறவினர் வருகை. |
| மிதுனம் | கௌரவக்குறைவு, வீண்விவாதம், பொருள் விரயம், நிலை மாற்றம். |
| கடகம் | ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், நண்பர்கள் உதவி, விருந்துபசாரம். |
| சிங்கம் | உணர்ச்சி வசப்படல், காரிய அலைச்சல், தந்தை வழி உறவு, சுபசெலவு. |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம். |
| துலாம் | சுபநிகழ்வு, கடின முயற்சி, தூரதேசச் செய்தி, போசன சுகம். |
| விருச்சிகம் | உடல்உழைப்பு, கட்டுப்பாடு, பிரயாண நன்மை, ஆரோக்கியக் குறைவு. |
| தனுசு | அபகீர்த்தி, எடுத்த காரியம் தாமதமாகும், வாகன பயம், போசன சுகம். |
| மகரம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, போசன சுகம், தொழில் நன்மை, பணவருவாய். |
| கும்பம் | சுகவாழ்வு, செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| மீனம் | புத்திரரால் கவலை, உஷ்ண வியாதி, முயற்சி தாமதம், தனவிரயம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 80 |
| தக்காளி | 50 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 100 | 110 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 40 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 80 |
| லீக்ஸ் | 80 | 90 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 90 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 240 |
| போஞ்சி | 80 | 90 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 110 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 30 |

# தமிழர்களின் தனித்துவத்தை சீர்குலைத்து மலினப்படுத்துவோருக்குப் பாடம் புகட்டுவோம்

## சுதுமலைக் கூட்டத்தில் துவாரகேஸ்வரன் சூளுரை


தமிழர்களின் தனித்துவத்தை மலினப் படுத்த முனைந்து களமிறங்கியிருப் போரு க்கு இந்தத் தேர்தலில் மக்கள் நல்ல பாடம் புகட்ட வேண்டும்.

சமூகத்துக்கு முன்னால் இனித் தலையெ டுக்க முடியாதவர்களாக அவர்களுக்கு நல்ல சாட் டையடி கொடுக்க மக்கள் முன்வரவேண்டும்.

யாழ் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட் சியின் சார்பில் போட்டியிடுபவரும் முன் னாள் அமைச்சர் அமரர் தி.மகேஸ்வர னின் சகோதரருமான தியாகராஜா துவார கேஸ் வரன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

தமிழ் மக்களின் தனித்துவம், மொழி, பண் பாடு, தாயகம் போன்றவை பேணிப் பாதுகாக் கப்பட வேண்டும் என்பதற்காகவே தமிழர்கள் தலைமுறை தலைமுறைகளாக உயிர், உதி ரம் கொடுத்துப் போராடி வருகின்றார்கள்.



ஆனால் தமிழர்களின் தனித்துவச் சிறப் பியல்பைச் சிதறடிப்பதற்காக அவர்க ளின் நாடாளுமன்ற வலி மையைத் தகர்க் கும் முயற்சியில் ஆளும் தர ப்பு ஈடுபட் டுள்ளது.

தமிழர் தாயகப் பகுதியில் எண்ணுக் கணக்கில்லாத குழுக்களைக் களம் இறக்கு வதன் மூலம், தமிழர் களின் வாக்குகளைச் சிதறடித்து அதன் வாயி லாக நாடாளுமன்றத் தில் வலிமையான தமிழ்க்குரல் எதிரொலிப்பதைத் தடுப்பதே ஆளும் தரப்பின் சூழ்ச்சி.

இந்தச் சூழ்ச்சிக்கு – வஞ்சகத்தனத்துக்கு – கபடத் திட்டத்துக்கு – உதவி, ஒத்தாசை புரிவ தற்கு நம் தமிழ் மக்கள் மத்தியில் சில புல்லுருவிகள் முளைத் திருக்கின்றமை நமது துர்ப்பாக்கியமாகும்.

இவர்களுக்கு மக்கள் வாக்களிக்காமல் அவர்களைப் புறக்கணித்து உதாசீனப்படுத்தி மண் கவ்வ வைப்பதோடு அதன்மூலம் அவர் களை வெட்கப்படவும் வைக்கவேண்டும்.

தமிழ்ச் சமுதாயத்தின் தனித்துவத்தைச் சிதறடிக்கத் துணை போன பெருங்குற்றத்துக்காக இமாலயத் தவறுக்காக – இத்தகையோர் இனி மேல் சமூகத்தின் முன்னால் வந்து நடமாடக்கூட முடியாத வகையில் தேர்தல் முடிபுகள் அவர்களுக்குத் தகுந்த பாடமாக அமைய வேண் டும்.

தனிப்பட்ட உறவுகள், நட்புகள், சுற்றம், தெரிந்தவர், அறிமுகமா னவர் என்ற உணர்வு நிலைகளைத் தள்ளி வைக்க வேண்டும்.

தமிழினத்தைக் கூறுபோட வந்த கொடு வினையாளர்கள் என அவர்களை அடையா ளம் கண்டு அவர்களை அம்பலப்படுத்துவ தற்காக இத் தேர்தலில் அத்தகையோருக்கு ஒரேயடியாக வாக்களிக்காமல் ஒட்டுமொத்த மாக அவர்களைப் புறக்கணித்து ஒரு சாதனை படைப்போம். இதனை நிலைநிறுத்த நாம் அனைவரும் முன்வர வேண்டும் என்றார் தி.துவாரகேஸ்வரன். (ந)

## யோகர் சுவாமிகளின் குருபூசைத்தினம்


யோகர் சுவாமிகளின் 46 ஆவது குரு பூசைத்தினம் நாளை வெள்ளிக்கிழமை சிவதொண்டன் சபையினரால் நடத்தப்பட வுள்ளது.

பங்குனி ஆயிலிய நாளான நாளை வெள்ளிக்கிழமை யாழ். சிவதொண்டன் நிலையத்திலும் கொழும்புத்துறை சமாதிக் கோயிலிலும் குருபூசை சிறப்பாக நடத்தப் படவுள்ளது. இதனை முன்னிட்டு சிவதொண் டன் நிலையத்தில் நற்சிந்தனை முற்றோதல் நடைபெற்று வருகின்றது. (6-4)

## உதவி ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல்

யாழ். மாவட்ட உதவி ஆசிரியர் சங்கத்தின் ஒன்று கூடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சங்கத்தினர் சமூகசேவைகள் மற் றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைசந்திக்கவுள்ளதால் அன்றைய தினம் அனைத்து உதவி ஆசிரியர்களையும் அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் ஒன்று கூடுமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித் துள்ளார். (6-4)

பாராளுமன்றத் பொதுத் தேர்தல் - 2010

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்

திரு. எஸ். எக்ஸ். குலநாயகம் அவர்கள்




யார் இந்தக் குலநாயகம்?

* இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்.
* இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் போராட்டங்களிலும் பங்குபற்றியவர்.
* இலங்கைத் தமிழரசுக் கட்சியின் குறிப்பாக தந்தை செல்வாவின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் பாத் திரமானவர்.
* இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட செயலாளராக பல வருடங்களாக கடமையாற்றி வருபவர்.
* போரின் உச்ச காலகட்டத்திலும் கூட துணிவுடன் தமிழரசுக் கட்சியை யாழ் மாவட்டத்தில் செயற்படுத்தி தந்தை செல்வாவின் பிறந்ததின, மற்றும் சிரார்த்த தினநிகழ்வு களை சிறப்பாக ஒழுங்குசெய்து நடாத்தி யவர் – இன்றும் நடாத்தி வருபவர்.



இப்படியான தமிழ்த் தேசிய உணர்வுடைய தமிழரசுக் கட்சியின் தொண்டனை பாராளுமன்றம் அனுப்ப வேண்டியது சகலரின் தலையாய கடமை அல்லவா? எனவே போடுங்கள் உங்கள் புள்ளடியை வீட்டுக்கு நேரே.




அடுத்த புள்ளடியை குலநாயகம் அவர்களின் இல. 12 க்கு மேலே போட்டு திரு. எஸ். எக்ஸ். குலநாயகம் அவர்களைப் பாராளுமன்றம் அனுப்புவோம்.



மானிப்பாய்த் தொகுதி
வாக்காளர்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சி



(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

எஸ். எக்ஸ். குலநாயகம்




## மாடிக்கட்டடத்திலிருந்து தவறி வீழ்ந்த இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள புடைவை நிலையமொன்றின் மேல் மாடிக் கட்டடத் தில் மேசன் வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் தவறி கீழே விழுந்ததில் காயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம் பவத்தில் அராலியைச் சேர்ந்த இ. இராச கோபால் (வயது - 23) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (6-30)

## 2005 இலிருந்து 2008 வரை மொத்த ஏற்றுமதி வருமானம் 170 பில். ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதி வருமானம் 170 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு 4976 பில்லியன் ரூபாவாக இருந்த மொத்த ஏற்றுமதி வரு மானம் 2008 இல் 6676 பில்லியன் ரூபா வாக அதிகரித்துள்ளதாகவும் இதே காலப் பகுதியில் 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆடைஏற்றுமதி வருமானம் 87 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள தெனவும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச் சின் செயலாளர் ஆர்.வி.டி. பியதிலக தெரிவித்தார்.

300 புதிய கைத்தொழில் நிறுவனங் களை ஸ்தாபிக்கும் மஹிந்த சிந்தனை விஞ் ஞாபனத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத் தியை கிராமப் பகுதிக்கு கொண்டு செல்லும் பல்வேறு கருத்திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருவதாகவும் நாடு பூராகவும் பல கைத்தொழில் வலயங்கள் திறக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித் தார். (ஓ-6)

# இறைச்சி உற்பத்திக்கும் காலநிலை மாற்றத்திற்கும் இடையிலான தொடர்பு மீள ஆய்வு செய்யப்படவுள்ளது

## ஐ.நா. தெரிவிப்பு

இறைச்சி உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் காலநிலை மாற்றத்திற்கும் இடையிலான தொடர்பு மீள ஆய்வு செய்யப்பட உள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

அதிகளவு இறைச்சி நுகர்வினால் இயற்கைக்கு பாதிப்பு ஏற்படுவதாக 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இறைச்சி உற்பத்தி அதிகரிப்பதனால் பச்சைவீட்டு விளைவும் உயர்வடைவதாக சேர் போல் மெக்கான்டி உள்ளிட்ட சிரேஸ்ட ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனினும் இந்த ஆய்வுகளின் உண்மைத் தன்மை குறித்து அமெரிக்க விஞ்ஞானிகள் தற்போது கேள்வி எழுப்பியுள்ளனர்.

இறைச்சி நுகர்விற்கும் காலநிலை மாற்றத்திற்கும் இடையிலான தொடர்பு மிகைப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே இறைச்சி நுகர்வு மற்றும் கால நிலை மாற்றம் தொடர்பில் மீண்டும் விசேட ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.

சரியான முறையில் விலங்கு வேளாண்மை செய்வதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் குந்தகங்களை தவிர்க்க முடியும் என கலிபோர்னிய விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறைந்தளவு இறைச்சி மற்றும் பால் உற்பத்தியினை மேற்கொள்வதன் மூலம் உலக நாடுகளின் வறிய மக்கள் மேலும் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து துறையுடன் ஒப்பீடு செய்யும் போது இறைச்சி உற்பத்தியினால் இயற்கைக்கு ஏற்படும் பாதிப்பு மிகவும் குறைவானதே என தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# சுகாதாரமற்ற தண்ணீரே பெரும்பாலான உயிரிழப்புகளுக்குக் காரணம்

## ஐ.நா. தெரிவிப்பு

(நியூயோர்க்)

உலகில் ஏற்படும் பெரும்பாலான உயிரிழப்புகள் சுகாதாரமற்ற தண்ணீரை பயன்படுத்து வதால் மட்டுமே ஏற்படுகின்றன என ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது. உலகில் ஆங்காங்கே ஏற்படும் கலவரங்கள், போர்கள் ஆகியவற்றினால் ஏற்படும் உயிரிழப்புகளை விட தண்ணீர் மாசுபாட்டால் ஏற்படும் உயிரிழப்புகளே அதிகம் என ஐ.நா தெரிவித்துள்ளது.

உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு திங்கட்கிழமை ஐ.நா அமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் ஐந்து வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை தண்ணீர் சம்பந்தமான நோயினால் இறந்து போகின்றது. கெட்டுபோன மற்றும் மாசடைந்த தண்ணீரை பயன்படுத்துவதால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்ற அனைத்து வகையான காரணங்களாலும் ஏற்படும் உயிரிழப்புக்களை விட அதிகம்.

சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், தொழிற்சாலை கழிவுகள் மற்றும் விவசாய கழிவுகளால் நீர் ஆதாரங்களை நாம் அன்றாடம் மாசுபடுத்தி வருகிறோம் . தினமும் கிட்டத்தட்ட 20 இலட்சம் தொன் கழிவுகள் ஆறுகள் மற்றும் கடல்களில் கலக்கப்படுகின்றன.

இந்த கழிவுகளே மாசுபடுவதற்கும் பல்வேறு நோய்கள் பரவுவதற்கும் ஆதாரமாக விளங்குகின்றன. இதனால் பெரி தும் பாதிக்கப்படுவர்கள் ஏழை மக்களே ஆவர். குடிநீர் தட்டுப்பாடு சுற்றுச் சுழல் கேடு மற்றும் சுகாதாரமற்ற கழிப்பிட வசதிகள் போன்ற பிரச்சினைகள் ஏழைகளையே பெருமளவில் பாதிக்கின்றன.

ஆண்டொன்றுக்கு 18 இலட்சம் குழந்தைகள் பாதுகாப்பற்ற குடிநீரைப் பயன்படுத்துவதால் உண்டாகும் நோய்களால் மட்டும் இறக்க நேரிடுகிறது.

தற்போது 600 கோடியாக உள்ள உலக மக்கள் தொகை இதே வேகத்தில் வளர்ச்சி அடைந்தால் எதிர்வரும் 2050க்குள் 900 கோடியை எட்டிவிடும். அப் போது ஏற் படும் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய அறிவுபூர்வமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தண்ணீரை மாசுபடாமல் தடுப்பதும் இந்த நடவடிக்கைகளுள் முக்கியமான ஒன்று என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஓ-6)

# சர்ச்சைக்குரியவர்கள் இலங்கைக்கு பிரவேசிப்பது தொடர்பில் விசேட நடைமுறை

(கொழும்பு)

பல்வேறு சமயங்கள் மற்றும் கலாசார - ங்கள் தொடர்பில் சர்ச்சைக்குரியவர்களாக கருதப்படுபவர்கள் நாட்டுக்கு வருகைதரு வது தொடர்பாக விசேட நடைமுறை யொன்றை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவ்வாறானவர்களுக்கான விசா அனுமதிகளை வழங்கும் நடவடிக்கைகளின் போது அதிக கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் அவ்வாறானவர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்க வேண்டுமாயின் அவர்கள் தொடர்பிலான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னரே அவர்களுக்கு விசா வழங்கப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (6-4)

# தமிழ் மொழித் தின எழுத்தாக்கப் போட்டிகள்

(அல்வாய்)

பருத்தித்துறை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டியில் எழுத்தாக்கம் தொடர்பான போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் வாசிப்பு, பேச்சு ஆகிய போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும் பிற்பகல் 1 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஓ-19)

# நல்லூர் பிரதேச சபையின் பொதுமக்களுக்கான வேண்டுகோள்


(யாழ்ப்பாணம்)

வீதி விபத்து, போக்குவரத்து நெரிசல் போன்றவற்றை தடுக்கும் நோக்குடன் திருநெல் வேலி சந்தைக்கு வெளிப்புறமாகவுள்ள நடைபாதை களுக்குத் தடையினை ஏற்படுத்தாத வண்ணம் பொது மக்கள் செயற்பட்டு நல்லூர் பிரதேச சபையினரின் செயற் பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நல்லூர் பிரதேச சபையினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துவிச்சக்கரவண்டிகளை நிறுத்து வதோ அன்றி பொருட்களை விற்பனை செய்வதோ இவ் விடங்களில் தடை செய்யப்பட்டுள்ளதுடன் தமது அறிவுறுத் தல்களை பின் பற்றாது செயல்படுவர்களுக்கு அவர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டு தண்டப்பணம் விதித்த பின் எச்சரிக்கை செய்யப்பட்டு அவை உரியவர்களிடம் மீளளிக்கப்படும் எனவும் நல்லூர் பிரதேச சபை யினர் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் முதல் தொடர்ச்சியாக பிரதேச சபை இந் நடவடிக்கையினை கடுமையான முறையில் முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-30)


## 45ஆம் நாள் நினைவு நிகழ்வு

பிறப்பு 20 08 1988



இரவீந்திரதாசன் விக்ரர் அருள்தாஸன்

பிறப்பு 11 05 1988



வேலாயுதம் திருவிருவிழி

(935)

மறைவு:- 2010.02.09

(பல்கலைக்கழக, முதலாமாண்டு மாணவர்கள் முகாமைத்துவ பீடம்)

*2010.02.09 அன்று அகால மரணமெய்திய இரவீந்திரதாசன் விக்ரர் அருள்தாசன், வேலாயுதம் திருவிழி ஆகியோரின் 45ஆம்நாள் நினைவு நிகழ்வு 2010.03.25 வியாழன் இன்று எமது இல்லத்தில் இடம்பெறும். அன்று நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பல்கலைக்கழக சமூகத்தினர், சக பணியாளர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

180, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
பெற்றோர்



## கண்ணீர் அஞ்சலி

13.03.2010 அன்று இறைபதம் அடைந்த வேலணை பிரதேச சபையில் கடமையாற்றும் திருமதி.கலைவாணி சண்முகலிங்கம் அவர்களின் அன்புத்தாயார்

அமரர் திருமதி **நாகமுத்து சுந்தர்லிங்கம்**

(ஓய்வுபெற்ற பரிசாரகர் -நயினாதீவு)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணியாளர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச சபை, வேலணை.

(C-4774)


# நிறுவனத் தலைவர்களுக்கான மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம்

சுகாதாரத்திணைக்களததின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற் கும் அரச சார்பற்ற நிறுவனங்களிற் குமான மாதாந்த மாவட்ட கண்காணிப் புக்குழு கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனை மாநாட்டு மண்டபத் தில் நடைபெறும். இக்கூட்டத்தில் சம்பந்தப் பட்டோர் தவறாது சமூகமளிக்குமாறு பணிப் பாளர் அறிவித்துள்ளார். (ஓ)


## கண்ணீர் அஞ்சலி

08.03.2010 அன்று இறைபதம் அடைந்த வேலணை பிரதேச சபையில் கடமையாற்றும் திரு.க.சண்முகம் அவர்களின் மனைவி

அமரர் **புஸ்பராணி சண்முகம்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணியாளர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச சபை, வேலணை.

(C-4776)


# வவுனியாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்


இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அலுவலகம் ஒன்று நேற்று முன்தினம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் கமலநலசேவைகள் கட்டடத்தின் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் வவு னியா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் பாரிய நன்மையடைவார்கள் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வவுனியா நகர சபை தலைவர் எஸ்.எம்.ஜி.வி. நாதன் ,வேலை வாய்ப்பு பணியகத்தின் பணியாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4)


## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 01 11 1920



இறப்பு 23 03 2010

நாவாந்துறையை வதிவிடமாகக் கொண்ட
யோசெப் அந்தோனிப்பிள்ளை (இராசமணி)
(ஓய்வு பெற்ற ரெலிக்கொம் ஊழியர்)

எமது நண்பர் அலோசியஸ் (இரத்தினகுமார்) அவர்களின் பாசமிகு தந்தையார் *யோசெப் அந்தோனிப்பிள்ளை* அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

A- 5, காதி அபூபக்கர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

(948)

தயா வீடியோ சென்ரர்
உரிமையாளர் , ஊழியர்கள்
(ஜெயந்தன்,பகிதரன்,ரஜீவன்,ராஜன்)
நண்பன் –வாசு.

# 23 இலங்கைப் பணியாளர்களுடன் 'தல்கா' சரக்குக்கப்பல் கடத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

எகிப்திலிருந்து ஈரான் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சரக்குக் கப்பலொன்று சோமாலிய கடற்கொள்ளையர்களால் ஏடன் வளைகுடாவில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளது.

ஓமான் கரையோரத்திலிருந்து 180 மைல் தூரத்திலுள்ள மெசிராவின் தென்பகுதியில் வைத்து இக்கப்பல் கடத்தப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தை மேற்கோள் காட்டி சி என் என் செய்தி வெளியிட்டுள்ளது.

பெர்மியூடா நாட்டுக் கொடியுடன் பயணிக்கும் வேர்ஜின் தீவுகளுக்குச் சொந்தமான எம்வி தல்கா என்ற இந்தச் சரக்குக் கப்பலில் உள்ள 25 பணியாளர்களில் 23 பேர் இலங்கையர்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சிய இருவரில் ஒருவர் பிலிப்பைன்சையும் மற்றையவர் சிரியாவையும் சேர்ந்தவர்கள். கடத்தப்பட்ட இக்கப்பல் தற்போது சோமாலியாவை நோக்கிக் கொண்டு செல்லப்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை துருக்கிக்குச் சொந்தமான மற்றுமொரு கப்பல் இந்து சமுத்திரத்தில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# பங்களாதேஷ் இராணுவ உயர்மட்ட குழு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்

(கொழும்பு)

எட்டு உயர் அதிகாரிகள் அடங்கிய பங்களாதேஷ் இராணுவ தூதுக்குழு ஒன்று இலங்கை வந்துள்ளது. இந்த உயர் மட்டக் குழுவினர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவை கடந்த திங்கட்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இரு இராணுவங்களுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இலங்கை இராணுவம் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவந்துள்ள நிலையில் இரு நாடுகளும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

பங்களாதேஷைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் முஹம்மட் இஹிதிஸாம் உல் ஹக் மற்றும் மேஜர் ஜெனரல் ஏ.கே.எம். சபருல்லாஹ் சித்தீக் ஆகியோர் வன்னி இராணுவ நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர். இந்தச் சந்திப்பின் முடிவில் பங்களாதேஷ் இராணுவ குழுவினர் இலங்கை இராணுவத் தளபதிக்கு நினைவுச் சின்னம் வழங்கினர். இந்தச் சந்திப்பின் போது இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகரும் கலந்துகொண்டார்.

இராணுவத் தளபதியுடனான சந்திப்பை அடுத்து இராணுவத் தலைமையகத்தின் நடவடிக்கைளுக்கான பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இந்த எட்டு உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் தியத்தலாவ இராணுவ அகடமி யாழ். பாதுகாப்புத் படைத் தலைமையகம் முல்லைத்தீவு மற்றும் வன்னி பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர். (ஓ-6)

# புனித அந்தோனியார் திருப்பண்டம் மீண்டும் இத்தாலிக்கு

(கொழும்பு)

புனித அந்தோனியார் திருப்பண்டம் நேற்று காலை மீண்டும் இத்தாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளின் பின்னர் புனித அந்தோனியாரின் திருப்பண்டம் இத்தாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கடந்த 7 ஆம் திகதி இத்தாலியிலிருந்து கொண்டு வரப்பட்ட புனித அந்தோனியாரின் திருப்பண்டம் நாடு முழுவதிலும் உள்ள பிரதான கத்தோலிக்க ஆலயங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பக்தர்களுக்கு வழிபடும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

சீதுவ லியனமுல்ல புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து நேற்று முன்தினம் புனித அந்தோனியாரின் இத் திருப்பண்டம் பண்டாரநாயக்க விமான நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

விமான நிலையத்தில் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து புனித திருப்பண்டம் விமானத்தின் மூலம் இத்தாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ஓ-6)

# பிரித்தானிய ஊடக விருது ஒன்றிற்காக திஸ்ஸநாயகத்தின் பெயர் பரிந்துரை

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பிரித்தானிய ஊடக விருதிற்காக சிரேஷ்ட ஊடகவியலாளர்களில் ஒருவரான ஜே.எஸ். திஸ்ஸநாயகத்தின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸ நாயகம் தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன உணர்வுகளைத் தூண்டும் வகையில் ஆக்கங்களை பிரசுரித்தமை மற்றும் புலிகளிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டமை போன்ற குற்றச் செயல்களுக்காக ஊடகவியலாளருக்கு இருபது ஆண்டுகால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.



எகிப்து, ஈரான், ஈராக், எரித்திரியா, அசர் பய்ஜான் மற்றும் பர்மா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 16 ஊடகவியலாளர்களின் பெயர்கள் இந்த விருதிற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஊடக விருது மிகவும் உன்னதமான விருதுகளில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை லண்டனில் இந்த விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# நாட்டில் காட்டுச் சட்டமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் காட்டுச் சட்டமே நடைமுறைப்படுத்தப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

எம்.ரீ.வி மற்றும் எம்.பி.சி ஊடக வலையமைப்பின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

காட்டுச் சட்டம் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம் மீது தாக்குதல் நடத்த வந்த குண்டர்கள் கூட்டம் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றிலேயே போக்குவரத்து செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் குறித்த ஊடக நிறுவனம் மீது தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது என குறிப்பிட்ட அவர் தம்மிடம் அறி விக்காது ஊடகவியலாளர்கள் கைது செய்யப் படக்கூடாது என ஜனாதிபதி கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும் அது அமுல்படுத்தப்படுவதில்லை என குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடக அமைச்சின் பொறுப்பை ஜனாதிபதி வகிக்கும் காலப் பகுதியிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-6)




## ஐ.தே.மு. ஆட்சியில்

# தகுதியற்றவர்கள் அரசியலுக்கு வருவதை தடுப்பதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்படும்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது அரசாங்கத்தின் கீழ் தகுதியற்றவர்கள் அரசியலுக்கு வருவதை தடை செய்வதற்கான சட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக ஐ.தே.முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

தாம் நாட்டை கட்டியெழுப்புவதற்காகவே வந்துள்ளதாகவும் ஏப்ரல் 9 ஆம் திகதி ஐ.தே. முன்னணி அரசாங்கம் நியமிக்கப்பட்டவுடன் புதிய சட்டங்கள் சிலவற்றை கொண்டுவரவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரசியலுக்கு தகுதியற்றவர்கள் வருவதை தடைசெய்யும் சட்டத்தை கொண்டு வருவதுடன் தகுதியற்றவர்கள் யாரென அந்த சட்டத்தினூடாக தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள், திருடர்கள் ஆகியோர் பாராளுமன்றத்துக்குள் பிரவேசிக்கமாட்டார்கள் என்றும் ஐ.தே.மு தலைவர் மேலும் தெரிவித்தார். (6-4)

# அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார்க்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினால் நாயன்மார்க்கட்டு அருள்மிகு ஸ்ரீபிச்சாடன மூர்த்தி ஆலயத்தில் பங்குனி உத்தரத்திருநாளான எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் நிகழ்வு நடத் தப்படவுள்ளது. (ஓ-4)

# சோமாலியாவில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் விடுதலை

கடந்த ஆறு மாத காலமாக சோமாலியாவில் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கப்பல் மாலுமி ஒருவரும் இரண்டு சிப்பந்திகளுமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சோமாலிய கடற்கொள்ளையர்களினால் குறித்த இலங்கையர்கள் கடத்திச் செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலத்திற்கு பின்னர் தனது கணவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக குறித்த கப்பலின் மாலுமியான சரத் வீரவன்சவின் மனைவி தெரிவித்துள்ளார்.

கென்ய தலைநகர் நைரோபியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக தமக்கு இந்தத் தகவல் கிடைக்கப் பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

டுபாயிலிருந்து சோமாலிய சென்ற ரோலோ லய்லா என்ற கப்பலிலேயே குறித்த இலங்கையர்கள் சிக்கினர். (ஓ-6)




இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் க.நிஜலிங்கம் அறநெறிப் பாடசாலை அதிபரிடம் சீருடைகள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால்

# இளைஞர், யுவதிகளுக்கான யூடோ பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட தலைமைக் காரியாலயத்தினால் இளைஞர், யுவதிகளுக்கான யூடோ பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது.

இதில் 16 வயது தொடக்கம் 29 வயது வரையுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்கள், பெண்கள் பங்கு கொள்ள முடியும் எனவும் ஆண்கள் 55 கிலோ முதல் 100 கிலோ வரையும் பெண்கள் 44 கிலோ முதல் 77 கிலோ வரையும் உடல் எடையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேலும் பயிற்சிகள் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மாலை 3.30 தொடக்கம் 6.30 மணிவரையும் சனிக் கிழமைகளில் காலை 8.30 மணிமுதல் 11.30 மணிவரையும் நடைபெறவுள்ளதுடன் பயிற்சியின் போது நாளொன்றுக்கு 500 ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் சயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் மேலதிக விபரங் களுக்கு பிரதேச இளைஞர் சேவை அலுவலகத்துடனோ அல்லது 0212222526 எனும் தொலை பேசி இலக்கத்தினூடாக தலைமை அலுவலகத்திலோ தொடர்புகொள்ளலாம் எனவும் குறிப்பிடப்படுகிறது. (ஓ-4)

# ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் பருத்தித்துறை சத்திய சாயி சமிதியின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (6-4-35)

# யோகாசன பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் இலவச யோகாசனப் பயிற்சி நெறியின் புதிய பிரிவுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறி ஆண்கள், பெண்கள், நோயாளர்கள் என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளதுடன் கலந்துகொள்ள விரும்புவோர் மணிமண்டபத்தில் பெயர்களை பதிவு செய்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ-4-18)

# நூல் வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டு பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான "ஞானச்சுடர்" சஞ்சிகையின் பங்குனிமாத இதழ் நாளை வெள்ளிக் கிழமை வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை தொண்டைமானாறு வீ.ம. மகா வித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி வழங்கவுள்ளதுடன் மதிப்பீட்டுரையை காரை எம்.பி. அருளானந்தம் வழங்கவுள்ளார். (6-4-35)

# மாணவர் விபரங்களை சமர்ப்பிக்கவும்

(அல்வாய்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் தரம் 5, 9, 11 ஆகியவற்றுக்கு நடத்தப்படவுள்ள முன்னோடிப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்களை அச்சிடுவதற்கு வசதியாக சகல பாடசாலைகளிலும் உள்ள தரம் 5,9,11 ஆகிய மாணவர்களின் விபரங்களை உடனடியாக தத்தம் வலயக் கல்விப் பணிமனையின் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார். (ஓ-4-19)




# கழிவுநீர் வாய்க்கால்களை சுத்திகரிக்க கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட நாவாந்துறை பிரதேசத்தில் கழிவுநீர் வாய்க்கால்கள் சுத்திகரிக்கப்படாததால் கான்கள் நிரம்பி வழிவதாகவும் அதனால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் நுளம்புகள் பெருகும் அபாயம் ஏற்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதனால் உரியவர்கள் கழிவுநீர் வாய்க்கால்களை சுத்திகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமக்கு நிவாரணமளிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-4)

# கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்களை அவர்களது உறவுகளிடம் ஒப்படைப்பது எனது பொறுப்பு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்தம் காரணமாக கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த எமது பிள்ளைகளை விடுதலை செய்வித்து, அவர்களது உறவுகளிடம் அவர்களை ஒப்படைப்பது தனது பொறுப்பாகும் என்றும் இவ்விடயம் தொடர்பில் தான் ஏற்கனவே ஜனாதிபதியுடன் கலந்துரையாடியிருப்பதாகவும் அதனால் ஜனாதிபதி இவ்விடயத்தில் மிகவும் தெளிவாக இருக்கின்றார் என்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வவுனியா, செட்டிக்குளம் ஆனந்தகுமாரசாமி, வலயம் 4, இராமநாதன், அருணாச்சலம் மற்றும் கதிர்காமர் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அங்கு தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், கடந்த கால அழிவு யுத்தம் எமது அப்பாவிப் பிள்ளைகளை ஆயிரக்கணக்கில் காவு கொண்டு விட்டது என்றும் இன்று கைது கைதுசெய்யப்பட்டும் சரணடைந்தும் இருக்கும் எமது பிள்ளைகள் தொடர்பில் எமது உறவுகள் அடையும் வேதனைகளைத் தான் உணர்வதாகத் தெரிவித்ததுடன், அவர்கள் குறித்து எந்தவித துன்ப, துயரங்களையும் அடையக்கூடாது எனக்கு கேட்டுக்கொண்டதுடன் அப் பிள்ளைகளை மீளவும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைப்பது தனது பொறுப்பாகும் எனக் கூறினார்.

அதேநேரம் காணாமற் போனவர்களைக் கண்டறியும் முகமாக சுதந்திரமான குழு ஒன்றை அமைக்கவும் தான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் இந்த நிலையில் தனது அரசியல் அதிகாரத்தை எமது மக்கள் பலப்படுத்துவதே இந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குத் தனக்கு வசதியாகவும் பலமாகவும் அமையும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (ஓ)



இணுவில் கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில் நடைபெற்ற பன்னிரு திருமுறை ஓதுதல் பூர்த்தி விழாவில் சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட ஓதுவார் மூர்த்திகளுடன் குருக்கள் தம்பதிகள் சமேதராய் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# வாக்காளர் அட்டை விநியோகம் 31 ஆம் திகதியுடன் முடிவுறும்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் தேர்தல் தினத்திலிருந்த 7 நாட்களுக்கு முன்பதாகவே முடிவுறுத்தப்பட்டு விடும் என யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.


வாக்காளர் அட்டை விநியோகத்திற்கான விசேட தினமாக எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்தல் செயலகத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தினம் விடுமுறை தினமாக இருந்தாலும் வாக்காளர் அட்டை விநியோகம் கூடுதலாக இடம்பெறும் என்வும் இவ் விநியோகம் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை இடம்பெறும் எனவும் தெரிவித்தார்.

இதன் பின்னரும் வாக்காளர் அட்டைகள் யாருக்காவது கிடைக்காது இருந்தால் தங்கள் பகுதிகளிலுள்ள அஞ்சல் அலுவலகத்திற்கு சென்று தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

தபால் விநியோகம் இடம்பெறும் இடங்களில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-30)

# மரண அறிவித்தல்



அன்னையின் மடியில்
27 03 1948

இறைவன் அடியில்
21 03 2010

## சின்னத்துரை நாகராஜா (புல்டோ)

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் , அச்சுவேலி கதிரிப்பாயினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகராஜா (புல்டோ) அவர்கள் 21.03.2010 அன்று காலமானார். அவர் காலஞ்சென்ற சின்னத்துரை, இரத்தினம் அவர்களின் அன்பு மகனும் தவமணி அவர்களின் அன்புக் கணவனும் , சுந்தரம் , பொன்ராசா , இந்திரா, சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் , தியாகராஜா, பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும் யோகராஜா , தங்கேஸ் வரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ,

யமுனதாஸ் (பிரான்ஸ்), காஞ்சனா (சுவிஸ்), கல்பனா (லண்டன்), குகதாஸ், கபிலதாஸ், கமலதாஸ் (பிரான்ஸ்), தர்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜாதா(பிரான்ஸ்), சிந்துஜா, ஜான்ஸி, ரெக்ஸி ஆகியோரின் மாமனாரும், சானுகா, சபினா, சங்கீத், மிதுஸ், லினேஸ், டிலக்ஷனா, அபிதாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.03.2010 வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் ஈமக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

முரசொலி வீதி, கதிரிப்பாய்,
அச்சுவேலி.
தொ.பே.0777111079

தகவல்,
குடும்பத்தினர்.

(942)

# படங்களுக்கு மெருகூட்ட இமேஜ் டூல்ஸ்




படங்களை நம் கற்பனைத்திறனுக்கேற்ற வகையில் அமைக்க, இமேஜ்களைக் கையாளும் பலஅப்ளிகேஷன் புரோகிராம்கள் உள்ளன. இருப்பினும் இவற்றை விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்துவது என்பது அனைவராலும் முடியாத ஒரு விடயமாகும். தொழில் ரீதியாகவும், பயன்படுத்திப் பார்க்கும் ஆசையிலும் இலவச இமேஜ் டூல்களை பலர் எதிர்பார்க்கின்றனர்.

இணையத்தில் இந்த நோக்கத்தில் தேடுகையில், ஒரு சில குறிப்பிட்ட வகையில் இமேஜ்களை எடிட் செய்திடும் வகையில் பல புரோகிராம்கள் இலவசமாகக் கிடைப்பது தெரியவந்தது. அவை குறித்த பட்டியல் இங்கு தரப்படுகிறது. இவற்றை இயக்கிப் பார்த்துப் பயன் பெறுவது உங்களின் திறமையைப் பொறுத்தது.

**வோட்டர் மார்க் இமேஜ்**
**(Water Mark Images)**

உங்கள் படங்களுக்கு வோட்டர் மார்க் அமைத்திட வேண்டுமா? மொத்தமாக 20 படங்கள் வரை இணைத்து அமைத்திட ஒரு புரோகிராம் உதவுகிறது. படங்களைத் தயார் செய்து, வரிசைப் படுத்தி, அவற்றுக்கான வோட்டர் மார்க்கில் இடம்பெற வேண்டிய எழுத்துக்களை ஒழுங்கு செய்து, அதன் இடத்தை வரையறை செய்து, அவற்றிற்கு விருப்பப் பட்டால், ஷடோ எபக்ட் கொடுத்து அமைக்கலாம். இதன் பெயர் Water Mark Images இதனை http://watermarkimages.com/ என்ற முகவரியில் பெறலாம்.

**பிக்ஸ் ரெட் ஐஸ்**
**(Fix Red Eyes):**

டிஜிட்டல் போட்டோக்களை எடுக்கையில் நம் கண்களில் சிவப்புப் புள்ளிகள்அமைவது தவிர்க்க முடியாததாக, சில டிஜி கேம்களில் அமைத்துவிடும். பல கமராக்களில் இவற்றை நீக்குவதற்கான செட்டிங்ஸ் கொடுத்திருந்தாலும், சில வேளைகளில் கண்களில் சிவப்புக் கோளங்ள் அமைந்துவிடுகின்றன. இந்த சிவப்பு வளையங்கள் அல்லது கோளங்களை நீக்கினால் தான் படங்கள் பார்க்கும் வகையில் அமையும்.

இதற்கான வசதியினை http://www.fixredeyes.com// என்ற முகவரியில் உள்ள தளத்தில் பெறலாம். இந்தத் தளத்திற்கு, இவ்வாறு சிவப்புக் கோளங்கள் நீக்க வேண்டிய இமேஜ்களை அப்லோட் செய்திட வேண்டும்.பின் அவற்றை சிவப்பு கோளங்களை அடையாளம் காட்டி, பிக்ஸ் (Fix) செய்திட கட்டளை கொடுத்தால், அவை நீக்கப்பட்டு போட்டோக்கள், நல்ல முகங்களுடன் சிறப்பாகக் கிடைக்கின்றன.

**இமேஜ் ஸ்பிளிட்டர்**
**(Image Splitter)**

படங்களைப் பிரித்து பல நெட்டு மற்றும் குறுக்கு வரிசைகளில் அமைக்க விரும்புகிறீர்களா? கவலையேபடவேண்டாம். உங்கள் படத்தை http://www.htmlkit.com/services/is/என்னும் தளத்திற்கு அப்லோட் செய்திடுங்கள்.

பின் எத்தனை நெட்டு மற்றும் படுக்கை வரிசை என்று தேர்ந்தெடுங்கள். எந்த இமேஜ் போர்மட்டில் படம் தேவை என்பதனையும், அதன் ரீசொல்யூசன் எவ்வளவு இருக்க வேண்டும் என்பதனையும் கொடுத்திட்டால், படம் நீங்கள் விரும்பிய வகையில் கிடைக்கும்.

**இமேஜ் மெர்ஜர் (image Merger)**

இரண்டு படங்களில் ஒன்றைப் பின்னணியிலும், மற்றொன்றை முன்பகுதிப் படமாகவும் அமைக்க விரும்புகிறீர்களா! இதற்கென ஒரு ஒன்லைன் டூல் கிடைக்கிறது. http://www.imagemerger.net/ என்ற முகவரி உள்ள தளத்திற்கு இரண்டு படங்களையும் அப்லோட் செய்திடுங்கள். முதல் படம் பின்னணியிலும், அடுத்த படம் முன் இடத்திலும் இருக்கும்படி அமைக்கப்படும்.

**மிரர் எபக்ட் (Mirror Effect)**


எந்தப் படத்திற்கும், அதன் வலது இடது பக்கங்களிலோ அல்லது மேல் கீழாகவோ, அச்சாக ஒரு கண்ணாடி பிம்பம் தோன்றும் வகையில் படத்தை மெருகூட்டி அமைக்கலாம்.http://mirroreffect.net/ என்ற தளத்திற்கு படத்தை அப்லோட் செய்திடுங்கள். அடுத்து பிரதிபலிக்க வேண்டியதற்கான அளவைக் கொடுக்கவேண்டும். கீழ்,மேல், இடது மற்றும் வலது என எந்த வகையில் பிரதிபலிக்க வேண்டும் என்பதனையும் அமைத்திட்டால், அழகான பிம்பத்துடன் கூடிய படமாக உங்கள் இமேஜ் அமைக்கப்பட்டுத் தரப்படும்.

**டெக்ஸ்ட் இமேஜ் (Text Image)**

போட்டோ ஒன்றை டெக்ஸ்ட் இமேஜ் ஆக மாற்றுவதற்கு ஒரு தளம் உதவுகிறது. இதன் முகவரி http://www.textimage.com/index.html HTML,ASCII or Matrix என்ற வகைகளில் எந்த வகையில் உங்களுக்கு வேண்டும் என தேர்ந்தெடுத்து வந்தால், இந்தத் தளம் அவ்வாறே அமைத்துத் தருகிறது.

(தொடரும்)

# எப்1 அழுத்தாதே ஆபத்து!!



மைக்ரோசொப்ட் நிறுவனம் அண்மை யில் ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளது. மைக்ரோசொப்ட் விண்டோஸ் 2000, எக்ஸ்பி சிஸ்டங்களில் ஒன்றை இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 7 அல்லது 8 சேர்த்துப் பயன் படுத்துபவர்கள் எப்1 கீ எனப்படும் ஹெல்ப் கீயை அழுத்தினால், ஹேக்கர்கள் எளிதாக கணனிகளில் புகும் வாய்ப்பு உண்டு என்று அறிவித்துள்ளது.

இந்த ஒப்பரேட்டிங் சிஸ்டங்களில் உள்ள விசுவல் பேசிக் கோடில் அமைந்த வரிகளில் உள்ள சிறு பிழையை ஹேக்கர்கள் பயன்படுத்த முடியும். ஏதேனும் ஒரு பொப் அப் விண்டோவினைத் திறந்து, உதவிக்கு எப்1 கீயினை அழுத்துமாறு ஹேக்கர்கள் வடிவமைத்திருப்பார்கள். அவ்வாறு அழுத்துகையில், அவர்கள் வேறு ஒரு இணையப் பக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மோசமான புரோகிராம் வரிகள் வழியாக, கணனியின் கட்டுப்பாடு ஹேக்கர்களின் கைகளுக்குச் சென்றுவிடும்.

இவ்வளவும் ஒப்பரேட்டிங் சிஸ்டம் மற்றும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்புகளில் உள்ள பிழை உள்ள தொகுப்பு வரிகளே காரணமாகும். இது குறித்த எச்சரிக்கையை மைக்ரோசொப்ட் வழங்கியுள்ளது.

யாரும் இது போல பொப் அப் விண்டோ எச்சரிக்கையைத் தொடர்ந்து எப்1 கீயை அழுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

இதற்கான பேட்ச் பைல் ஒன்றைத் தரும் முயற்சியிலும் இறங்கியுள்ளது. இந்த எச்சரிக்கையைப் படித்த பலர் நமக்கு எதுக்கு வம்பு பிரவுசரையே மாற்றிவிடுவோம் என இன்டர்நெட் எக்ஸ்புளோரரை விடுத்து மற்றவற்றிற்கு மாறி வருகின்றனர்.




# மல்டிமீடியா தேவைகளுக்கு




கணனியில் இன்று ஓடியோ, வீடியோ பைல்களைப் பயன்படுத்தாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். அந்த அளவிற்கு நாள் தோறும் ஏதேனும் ஒரு ஓடியோ, வீடியோ பைலைப் பயன்படுத்தி வருகிறோம். பெரும்பாலானவர்கள் பயன்படுத்துவது விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்துடன் கிடைக்கும் விண்டோஸ் மீடியா பிளேயர் தொகுப்பாகும்.

ஆனால் ஒரு நிலையில் நம் தேவைகள் அதிகமாகி, வேறு மீடியா பிளேயர் உள்ளதா என்று தேட ஆரம்பிப்போம். குறிப்பாக ஓடியோ, வீடியோ பைல்களை எடிட் செய்திடவும், கட் செய்திடவும் நமக்கு புரோகிராம்கள் தேவைப்படும். இந்தச் செயல்களுக்கு நாம் வேறு தர்ட் பார்ட்டி புரோகிராம்களைத்தான் நாடவேண்டியுள்ளது.

அண்மையில் மேலே குறிப்பிட்ட அனைத்து வசதிகளையும் தரக்கூடிய புரோகிராம் ஒன்று இலவசமாகக் கிடைப்பது தெரிய வந்தது. அதன் பெயர் மீடியா கோப் (Media Cope) . இந்தப் புரோகிராமினை http://www.media cope.com என்ற முகவரியில் உள்ள இணையத்தளத்திலிருந்து டவுண்லோட் செய்து இன்ஸ்டோல் செய்து கொள்ளலாம்.

இந்தப் புரோகிராமில் மீடியா பைல்கள் குறித்த நம் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ளலாம். இதில் ஓடியோ/வீடியோ பிளேயர், ஓடியோ /வீடியோ கட்டர் மற்றும் ஓடியோ/ வீடியோ கொன்வேர்டர் ஆகியவை தரப்பட்டுள்ளன. இவற்றுடன் போட்டோக்களை தேவையான பகுதியை கட் செய்து அமைக்கவும்,போர்மட் மாற்றவும் மற்றும் அளவினை மாற்றவும் போட்டோ கட்டர் என்ற புரோகிராம் தரப்பட்டுள்ளது.

இது மிகவும் பயனுள்ள புரோகிராமாக உள்ளது. இதனைக் கொண்டு நூறு இமேஜ் பைல்களைக் கூட சில நிமிடங்களில் கையாளலாம்.

**இந்த வார டவுண்ட்லோட்**

மேலும் படங்களுடன் இசையை இணைத்து ஒரு மூவி போல அமைத்திட Movie like real time slide show viewer என்னும் புரோகிராம் பிரிவு உதவுகிறது.

மீடியா கோப் புரோகிராம் mp3, wav, aac, wma, flac, m4a, ac3, rmvb, mp4, 3gp, wmv, mov, avi, divx, mpg, flv, mkv மற்றும் vob என அனைத்து போர்மட்களில் உள்ள வீடியோ மற்றும் ஓடியோ பைல்களைக் கையாளும் திறன் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி jpg, bmp, gif, tiff, png, emf and wmf ஆகிய இமேஜ் போர்மட் பைல்களையும் கையாள்கிறது.

இன்னும் போனஸாக, சில இன்டர்நெட் டூல்ஸ்களும் தரப்பட்டுள்ளன. இணைய இமேஜ்களை முழுத் திரையில் காண்பதற்கு Web Image Full Screen Viewer தரப் பட்டுள்ளது. இதன்மூலம் இணையத் தளத் தில் காட்டப்படும் எந்த ஒரு இமேஜையும் விரித்துக்காணலாம்.

Speak Text என்னும் டூல் மூலம் இணையத்தளத்தில் உள்ள டெக்ஸ்ட் ஒன்றைப் பேச்சுக் குரலில் கேட்கலாம்.


இதனை இன்ஸ்டால் செய்தவுடன் மிக எளிதாகப் பயன்படுத்தலாம்.


தொடக்கத்திலிருந்தே ஒரு எக்ஸ்போர்ட் போல இதனைக் கையாளலாம். பிரச்சினைகள் இருந்தால் அல்லது தெளிவு தேவைப் பட்டால், ஹெல்ப் பட்டனை அழுத்தினால் பல தலைப்புகளில் தெளிவுரைகள் வழிகாட்டிகளாகத் தரப்பட்டுள்ளன.

முழுமையான இதுபோன்ற ஹெல்ப் பைல்கள் ஒரு சில புரோகிராம்களில் மட்டுமே கிடைக்கும்.

இத்தனை பாராட்டுக்கும் இது உரியது தானா என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.

புரோகிராமினை இறக்கி, இன்ஸ் டோல் செய்து பயன்படுத்திப் பார்த்தால் இது உண்மை எனத் தெரியும்.



# பாராளுமன்றப் பொதுத் தேர்தல்

## தமிழர் விடுதலைக் கூட்டணி

X



- சோரம் போகாத தலைமை.
- இரத்தம் தோயாத கறைபடியா கரங்கள்.
- மாசுபடாத மக்கள் சேவை.
- பதவிதேடி அலையாத மனிதர்.
- பொய்யையும் புரட்டையும் எதிர்த்து எதிர் நீச்சல் போட்டவர்.
- உள்ளதை உள்ளபடி கூறி இனத்துக்குப் பெருமை தேடித் தந்தவர்.
- ஒழிவு மறைவின்றி துணிச்சலுடன் செயற்படுபவர்.
- தந்தை செல்வாவின் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றாதவர்.
- அமரர் ஜிஜியின் நன்மதிப்பைப் பெற்றவர்.
- அமரர் அமிரின் நன்மதிப்பைக் காப்பவர்.
- ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமான யுனெஸ்கோவின் சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சையை முன்னெடுக்க மதன்ஜித் விருது பெற்றவர்.
- சிங்கள, இஸ்லாமிய மக்கள். மத்தியில் பெரிதும் நன்மதிப்பை பெற்றவர்.
- சர்வதேச சமூகத்தால் பெரிதும் மதிக்கப் படுபவர்.
- இத்தனைக்கும் சொந்தமான ஒரே ஒரு தமிழ்த் தலைவர் இன்று வீ.ஆனந்தசங்கரி மட்டுமே அவரிடம் தமிழ்மக்களின் எதிர்காலத்தை ஒப் படைப்போம்.

உதயசூரியனுக்கே வாக்களிப்போம்.
4 மாவட்டங்களிலும் போட்டியிடும் எமது வேட் பாளர்களை வெற்றி பெறச் செய்வோம்.

கொழும்பு, மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் } தேர்தல் மாவட்டங்கள்

# ஜெனரல் சரத்பொன்சேகாவை விடுதலை செய்ய ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே முடியும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய முடியும் என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டுமென விரும்பும் சகல மக்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனநாயக தேசிய முன்னணியின் வெற்றிக் கிண்ண சின்னத்திற்கு வாக்களிப்பதன் மூலம் ஒருபோதும் ஜெனரல் பொன்சேகாவை விடுதலை செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிக் கிண்ண சின்னத்தின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் ஜெனரல் பொன்சேகா போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பின்னர், ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ளக்கூடிய ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



மக்கள் இதனை புரிந்து கொள்ள வேண்டும் எனவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தால் பொன்சேகாவை விடுதலை செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சம்பவம் சட்ட விரோதமானது எனவும், இதற்காக தமது கட்சி தொடர்ந்தும் போராடும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களின் பின்னர் ஜனநாயக தேசிய முன்னணியுடன் இணைந்து செயற்பட தமது கட்சி தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# அகிம்சைவாதியின் நினைவுத் தூபியை உடைப்பது காட்டுமிராண்டித்தனம்

## த.வி.கூ. தலைவர் ஆனந்தசங்கரி

(யாழ்ப்பாணம்)

ஒருகாலத்தில் ஆயுதப் போராட்டத்தின் மீது நம்பிக்கை வைத்து தீவிரமாகப் போராடிய திலீபன், தமிழ் மக்களின் கனவும் இலட்சியமும் நிறைவேற வேண்டுமானால் அதற்கு சரியான வழி தந்தை செல்வா, அமரர் அமிர் போன்றோர் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் அகிம்சை ரீதியான போராட்டமே சரியென உணர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்தவர். இறுதியில் ஒரு அகிம்சைவாதியாக உயிர் நீத்தார்.

அவ்வாறான இலட்சியத்தை கொண்டவர்களின் நினைவுத்தூபியை உடைப்பதென்பது மிகவும் காட்டுமிராண்டித்தனமான செயல் மட்டுமல்ல மன்னிக்கமுடியாத வரலாற்றுத் துரோகமும் கூட.

இரத்தவெறி பிடித்தவர்களே இவ்வாறான செயலைச் செய்வார்கள். ஒருவரின் நினைவாக அமைக்கப்படும் நினைவுத் தூபிகளும் சரி, சின்னங்களும் சரி உடைக்கப்படுவதென்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். இவ்வாறான மிலேச்சத்தனமான செயலை தமிழர் விடுதலைக் கூட்டணி மிக வன்மையாக கண்டிக்கின்றது. (ஓ)

# சிரச அலுவலக தாக்குதல் குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)


சிரச ஊடக நிறுவனத்தின் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து விரிவான விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்த பொலிஸாரின் அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

இதேவேளை அமெரிக்கப் பொப்பிசைப் பாடகர் ஒருவரை அழைத்து இலங்கையில் இசை நிகழ்ச்சி நடாத்த குறித்த ஊடக நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தமக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதென பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மேலும் குறித்த தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர்கள் பொலிஸார் பிணையின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட அன்றே விடுதலை செய்யப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறெனினும் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு பொலிஸார் அறிக்கை சமர்ப்பிக்கத் தவறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. இதில் லயன்ஸ் கழக தலைவர் லயன் இ. கந்தையா பயனாளி ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதை படத்தில் காணலாம்.

# தம்மைக் கைது செய்தமைக்கு எதிராக முன்னாள் இராணுவ அதிகாரிகள் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கம் செய்யத் திட்டம்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் இணைந்து அரசுக்கு எதிராக சதிசெய்ததாக குற்றம் சாட்டி சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலர் தங்களை கைது செய்த அதிகாரிகளுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை தாக்கல் செய்யப் போவதாக தெரிவித்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக சாட்சியம் கிடைக்காததால் அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். எனவே தங்களை கைது செய்தது சட்ட விரோதம் எனத் தெரிவித்து தற்போது அடிப்படை உரிமை மீறல் மனுவை இவர்கள் தாக்கல் செய்யவுள்ளனர். (ஓ-6)

# பொதுத் தேர்தலின் போது நாடு முழுவதும் 6,500 உள்ளூர் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவர்

## கபே அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் நாடுபூராகவும் 6,500 உள்ளூர் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவுள்ளதாக நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் எனப்படும் 'கபே' அமைப்பின் ஏற்பாட்டாளர் சட்டத்தரணி கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - றிவேரா ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமையன்று 'கபே' அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் கண்காணிப்பாளர்களை அறிவுறுத்தும் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த கீர்த்தி தென்னக்கோன், வடக்கு, கிழக்கு உட்பட நாடுபூராவும் கபே அமைப்பு தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்திலும் வன்னி, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் உட்பட நாடுபூராவும் 6,500 உள்ளூர் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

கபே அமைப்பு நடுநிலையானதும் சுதந்திரமானதும், நீதியானதுமான அமைப்பாகும். தேர்தல் சட்டங்கள், தவறுகள் மற்றும் தண்டனைகள் தொடர்பாக மக்களுக்கு மிகத் தெளிவாகக் கூறிவருகின்றது.

தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களுக்கு ஆள் அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றது என மேலும் அவர் தெரிவித்தார். (ஓ-6)

# பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் அரசின் செலவிலேயே இலங்கை விஜயம்

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் லியாம் பொக்ஸின் இலங்கைக்கான சில விஜயங்களின் போது இலங்கை அரசாங்கமே இவருடைய விஜயத்திற்கான செலவுகளை செய்திருந்ததாக பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது 2007 ஆம், 2008 ஆம், 2009 ஆம் ஆண்டுகளில் லியாம் பொக்ஸ் 5 தடவைகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதாகவும் இவ் விஜயங்களின் போது இலங்கை அரசே இதற்கான செலவுகளை மேற்கொண்டதாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

(இராமேஸ்வரம்)

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் தாக்கி படகிலிருந்த மீன்கள் ஜி.பி.எஸ். கருவிகளை பறித்து சென்றனர். மேலும் இரண்டு படகுகளையும் அதிலிருந்த மீனவர்களையும் இரவு முழுவதும் சிறைவைத்து மறுநாள் விடுவித்துள்ளனர்.

இதுகுறித்து தெரிய வருவதாவது,


இராமேஸ்வரம் மீனவர்கள் வழக்கம் போல் ஏராளமான படகுகளில் கடந்த திங்கட்கிழமை மீன்பிடிக்க சென்றனர்.

அன்று மாலை நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இவர்களை ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் பிளாஸ்டிக் பைப்பினால் தாக்கியுள்ளனர். பின்னர் படகில் இருந்த ஜி.பி.எஸ். கருவி மீன்களையும் பறித்து கொண்டு விரட்டியடித்துள்ளனர்.

தங்கச்சிமடத்தை சேர்ந்த சூசை அருளானந்தம், சிங்கராயர் ஆகியோரின் படகில் இருந்த மீனவர்களை தாக்கிய கடற்படையினர், படகை இரவு முழுவதும் தங்களது வசம் கட்டிவைத்து அதிகாலையில் அவிழ்த்து விட்டதாக இந்த படகுகளில் மீன்பிடிக்க சென்று கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர். (ஓ-6)

நாடாளுமன்றத் தேர்தல் - யாழ் மாவட்டம்

6



K.S.முத்துலிங்கம்

X

தமிழர் விடுதலைக் கூட்டணி

# சர்வதேச ஆங்கில மொழிப் பாடகர் அகோனுக்கு விசா மறுக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

உலகின் முன்னணி ஆங்கில மொழிப் பாடகர்களில் ஒருவரான அகோன் இலங்கைக்குள் பிரவேசிக்க விசா வழங்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் அகோனின் படைப்பு ஒன்று காணப்படுவதனால் அவருக்கு விசா வழங்கமுடியாதென அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி அகோனின் இசை நிகழ்வு கொழும்பில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாத்துறை அமைச்சர் அசல ஜாகொடவிற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பினைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எவ்வாறெனினும், அகோனிற்கு விசா வழங்கப்படமாட்டாது என்பது தொடர்பில் தமக்கு எவ்விதத் தகவல்களும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என குறித்த இசை நிகழ்வினை இலங்கையில் ஏற்பாடு செய்யும் பிளட்டினம் என்டர்டெயின்ட்மன்ட் நிறுவனத்தின் பணிப்பாளர் லசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து உரிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

செக்ஸி சிக்ஸ் என்ற வீடியோ அல்பத்தில் அகோன் தோன்றியதாகவும், இந்த பாடலில் பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையிலான காட்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த இசை நிகழ்விற்கு அனுசரணையாக நிறுவனத்தின் மீது குற்றம் சுமத்துவதில் பலனில்லை என தேசிய சங்கப் பேரவையின் ஆலோசகர் அசோக மெனிக்கொட குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பில் அகோன் வேதனை வெளியிட்டுள்ளார்.

இசை நிகழ்வு ஒன்றினை நடாத்துவது தொடர்பில் இலங்கயில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் வேதனை அளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளதாகவும் தாம் தோன்றிய வீடியோ ஆல்பம் ஒன்றில் புத்தரை இழிவுபடுத்தும் காட்சிகள் அமையப் பெற்றிருந்தமை குறித்து தமக்கு எதுவும் தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# மகனைச் சுட்டுக் கொன்றவருக்கு மரணதண்டனை வழங்கி தீர்ப்பு

(கொழும்பு)

தனது மகனைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மதவாச்சி புனித பகுதியை வதிவிடமாகக் கொண்டஒருவருக்கே இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


2005 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினமொன்றில் திலங்க சமரநாயக்க என்ற பெயருடைய நபர் தனது மகனை சுட்டுக் கொலை செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பிரதிவாதிக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முறைப்பாட்டுப் பிரிவினர் சந்தேகமின்றி நிரூபித்துள்ளதாக வடமத்திய மாகாணத்துக்கான மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜய சுந்தர தெரிவித்தார். (ஓ-3)

## தேர்தலின் பின்னர்

# ஐ.தே.கவும் ஜே.வி.பியும் பொதுநோக்கத்தின் அடிப்படையில் இணைந்து செயற்படும்

### ரவி கருணாநாயக்க



கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எதிர்க்கட்சிகள் பொது நோக்கத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டன. எனினும் பாராளுமன்றத் தேர்தலின்பொது அந்தந்தக் கட்சிகள் தமது தனித்துவத்துக்கு ஏற்ப செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் நிலைமைகள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து ரவி கருணாநாயக்க மேலும் கூறியதாவது,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது நோக்கத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன இணைந்து செயற்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜனாதிபதித் தேர்தலின் போது எதிரணிக்கு ஆதரவு வழங்கியது.

ஆனால் பாராளுமன்றத் தேர்தல் என்பது முற்றிலும் மாறுபட்ட விடயமாகும். இது மாவட்ட மட்டத்தில் வேட்பாளர்கள் சம்பந்தப்பட்ட விடயமாக உள்ளது. இந்நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் தமது தனித்துவத்தை வெளிக்காட்டியவாறு போட்டி யிடுகின்றன.

அதன்படி பார்க்கும் போது ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது. அதேபோன்று ஜனநாயக தேசியக் கூட்டணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தல் விஞ்ஞானபனங்களை வெளியிட்டுள்ளன.

எனினும் பாராளுமன்ற தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசிய கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் பொது விடயங்களின் அடிப்படையில் இணைந்து செயற்படும் .(ஓ-6)

# அம்பாறை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(கொழும்பு)

அம்பாறை பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.


அம்பாறை வீரகொட பொலிஸ் வீதிச் சோதனைச் சாவடிக்கு அருகாமையில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் முச்சக்கர வண்டியொன்றின் சாரதியொருவர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் மேலும் ஒரு இளைஞர் காயமடைந்துள்ளதாகவும் காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

குறித்த வீதிச் சோதனைச் சாவடியில் பொலிஸாரும் சிவில் பாதுகாப்புப் படையினரும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)


ஈழத் தமிழர்களுக்கு எதிரான இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியை எதிர்ப்போம்!



யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட
தமிழ்த் தேசிய விடுதலைக்
கூட்டமைப்பு வேட்பாளர்கள்

ந.சிறீகாந்தா - எம்.கே.சிவாஜிலிங்கம்

(முன்னாள் - பாராளுமன்ற உறுப்பினர்கள்)

2



3

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

தேசியம்–தாயகம்–சுயநிர்ணய உரிமை

X

- தமிழ் ஈழதேசம், சிங்களதேசம் இணைந்த இலங்கை ஒன்றியம் (Union of Ceylon) என்ற கூட்டு இணைப்பாட்சியின் (Confederation) அடிப்படையிலேயே நிரந்தரத் தீர்வு காணப்பட முடியும்.
- 12,000 தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்.
- பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றை மீளப்பெறு.
- வன்னிப் போரிலும், கிழக்குப் போரிலும் 50,000 தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலைக்காக சர்வதேச நீதி விசாரணையைக் கோருவோம்.
- சுமார் ஐந்து இலட்சம் அகதிகளின் மீள்குடியேற்றத்தை ஐ.நா.விடம் ஒப்படை.
- உயர்பாதுகாப்பு வலயங்களை முற்றாக நீக்கு.
- தமிழர் தாயகத்தில் இராணுவ ஆட்சியை மீளப்பெறு.
- சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்து.
- போரில் கொல்லப்பட்டவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் சொத்து அழிவுகளுக்கும் போதியளவு நஷ்ட ஈட்டை வழங்கு.
- வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை (Interim Self - Governing Authority - ISGA) நிரந்தரத் தீர்வு கிடைக்கும்வரை நிறுவ நடவடிக்கை எடு.

(சி-4807)

# அவல வாழ்வு தொடராமல் இருக்க அரசியல் பலத்தினை உறுதி செய்ய வேண்டும்

***20.03.2010 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஆசிரிய மாணவர்களுடனான கலந்துரையாடலில் தமிழர் தேசிய கூட்டமைப்பு சார்பில் தமிழரசுக்கட்சி வேட்பாளராக போட்டியிடும் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தெரிவித்த கருத்துக்கள்.***

பொதுவாக எம்மக்கள் மத்தியில் அரசியல் தொடர்பான ஒருபக்கப் பார்வையே இருக்கின்றது.

இந்நிலையில் மக்கள் பல அரசியல் சித்தாந்தங்களுக்குள் திசை திரும்பித் தடுமாறியமைக்குக் காரணம் கடந்தகால இலங்கை அரசுகளும் தமிழ்த் தலைமைகளும் தந்த அனுபவங்களே!

உண்மையில் நான் பல இடங்களில் அடிக்கடி குறிப்பிடுவது போல அரசியலில் மக்களின் மேம்பாடு சார்ந்த ஆக்கபூர்வமான விடயங்களை எமது மக்களுக்கு வழங்க வேண்டிய தேவை உண்டு.

ஆனால் எமது மக்கள் கடந்த தமது 60 வருடங்களுக்கு மேலான அரசியல் பங்கு பற்றலினூடாக அதிகமான துயரங்களையே பெற்றுக்கொண்டார்கள்.

2009 இல் வன்னிப் பெருநிலப்பரப்பில் எமது மக்கள் மிகப்பெரிய மனித அவலத்தை உலகத்தில் எங்கும் நிகழாத இடப்பெயர்வினைச் சந்தித்தனர். இன்னமும் அவர்கள் அவலத்திலிருந்து மீள முடியாதவர்களாகவே பெயரளவில் வாழ்ந்து வருகின்றனர்.

போரின் வெற்றியையும் தமிழ் மக்களின் இன அழிப்பையும் காட்டிப் பெருமித அரசியல் நடாத்தும் மகிந்த அரசுக்கு எம்மக்கள் கை, கால்களை இழந்த, உடன் பிறப்புக்களை இழந்த, பெற்றோரையிழந்த , பிள்ளைகளையிழந்த, சொத்துக்களையிழந்த துன்ப துயரங்கள் பிரசார யுக்தியாகவே பயன்படுகின்றன.


வன்னிப் பெருநிலப் பரப்பில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டுமென்பது அனைவரின் விருப்பாய் உள்ளது.

ஆனால் ஏ-9 வீதியோரங்களில் ஓரிரு தகரக் கொட்டில்களி லேயே மக்களைக் காண முடிகிறது.

இன்னமும் மக்களைப் போகவிடாத பகுதிகளே அதிகம். எதுவித இழப்பீடுகளும் இதுவரை வழங்கப்படவில்லை. இவற்றிலிருந்து எமது மக்களை மீளச்செய்வதே தமிழ் அரசியலில் இறங்கியுள்ள எமது கடமையாகும்.

அதேபோல் யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் இருபது வருடங்களுக்கு மேலாக வெவ்வேறு இடங்களில் முடக்கப்பட்டு அவர்களின் திறமைகள், முயற்சிகள் அடக்கப்பட்டுள்ளன.






20 வருடங்களாக மீள்குடியேற்றம் செய்ய முடியாது அல்லறுகின்றார்கள். ஒவ்வொரு தேர்தல்களின் போதும் உறுதிகள் வழங்கப்படுகின்றன. இதனைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் எம்மால் காணமுடிந்தது.

எம்மக்களின் இந்த அவல வாழ்வு தொடராமல் இருப்பதற்கு எங்களுக்கான அரசியல் பலத்தினை பொருத்தமானவர்களைக் கொண்டு உறுதி செய்ய வேண்டிய தேவை உங்கள் அனைவரின் கைகளிலுமே உள்ளது. (ந)

# தமிழர்கள் தோற்றுப்போன இனமல்ல எங்களுக்கும் சமஉரிமை வேண்டும்

## திருமதி பத்மினி சிதம்பரநாதன் உரை



தமிழர்களின் நீண்ட கால உரிமைப் போராட்டத்தின் விளைவாக இன்று தமிழர் பிரச்சினை உலகில் பேசு பொருளாகியுள்ளது. இலங்கை நாடும், இலங்கையின் இனப்பிரச்சினையும் சர்வதேசத்தின் கவனத்துக்குரியதாகியுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமாயின் தமிழர்களுடன் பேசவேண்டும் என்ற கருத்து இன்று மேலோங்கி வருகின்றது. இவ்வாறு தமிழ்த் தேசிய விடுதலைக்கூட்டமைப்பின் வேட்பாளர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார். நெல்லியடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனாதிபதியும் கூட தான் தமிழர்களுடன் பேசப்போவதாக குறிப்பிட்டிருக்கிறார். தமிழர்கள் மீது நடத்திய யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு, பெருமளவு சொத்துக்கள் அழிக்கப்பட்டு, 3 இலட்சம் அளவிலான மக்கள் முட்கம்பிகளுக்குள் அடைக்கப்பட்ட பின், கொழும்பு நகர வீதிகளில் பாற்சோறு பொங்கி சாப்பிட்ட போது இனித் தமிழர்களுடன் பேசத் தேவையில்லை என்ற கருத்தே கொழும்பில் மேலோங்கியிருந்தது.

ஆனால், அதன்பின்பு தமிழர்களின் உறுதியான நிலைப்பாட்டின் காரணமாக அதாவது, கடந்த தேர்தல்களின் பெருமளவு மக்கள் ஒதுங்கியிருந்து தமது ஆர்வமின்மை, எதிர்ப்பு ஆகியவற்றைத் தெரிவித்ததன் மூலம் தமிழர்கள்பால் தமது உபாயத்தை மாற்றியே ஆகவேண்டும் என்ற எண்ணம் தெற்கில் எழுந்திருக்கிறது. இன்று தமிழர்களுடன் பேசவேண்டும் என்ற எண்ணம் தெற்கில் ஏற்பட்டுள்ளது.

ஆனால், அந்தப் பேச்சுவார்த்தையை தமிழர்களின் நலனுக்கு உகந்த முறையில் எடுத்துச் செல்லும் பொறுப்பு எமது கைகளில் தான் தங்கியுள்ளது.

சர்வதேசத் தரப்புக்களும் ஸ்ரீலங்கா மீது தமது நலன்களை அடிப்படையாக வைத்து தமது கவனத்தைக் குவிக்கத் தொடங்கியுள்ளன. சர்வதேச சமூகம், தமிழர்களுடன் அதாவது, தாயகத்தில் வாழும் தமிழர்களுடனும் புலம்பெயர்ந்த தமிழர்களுடனும் ஸ்ரீலங்கா அரசு பேசவேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வருகின்றது. சர்வதேச சமூகம் தமிழர்களின் நியாயமான அபிலாசைக்கேற்ப இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது. இது ஒரு சாதகமான நிலைமை.

இந்த நேரத்தில் தமிழர்களின் கொள்கை உறுதிப்பாட்டோடு நின்று தமது நியாயத்தை சகல சம்பந்தப்பட்ட தரப்புகளோடும் கலந்துரையாடலில் ஈடுபடுவதன் மூலம் தமிழர்களின் நலனை அடைய முடியும்.

தமிழர்களின் இறைமையின் அடிப்படையில் மற்றவர்களின் இறைமையை மதித்துக் கொண்டு நாம் பேசும் போது எமது நியாயத்தை மற்றவர்களால் மறுக்கமுடியாது.

ஆனால், இன்று தமிழர் மத்தியிலுள்ள சிலர் முக்கியமாகச் சில கட்சிகள் தமிழ் மக்களை குழப்ப முற்படுகின்றனர். தமிழர்களிடத்து ஒரு தோல்வி மனப்பான்மையை தூண்டுவதற்கு முயற்சிக்கின்றார்கள். 30 வருட ஆயுதப் போராட்டத்தினால் தமிழர்கள் அடைந்தது எதுவுமில்லை. எல்லாம் வீண். எல்லாம் போச்சுது. இனித் தமிழர்களால் எதுவும் செய்ய முடியாது. மற்றவர்களின் தயவைத்தான் தங்கியிருக்க வேண்டும். ஏனைய நாடுகளின் தயவில்தான் தங்கியிருக்க வேண்டும். ஏனைய நாடுகளின் தயவால் ஏதாவது கிடைப்பதை பெறவேண்டும் என்றவாறாக மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

இத்தகைய குழப்பத்தை ஏற்படுத்தும் இரண்டு விதமான போக்குகளை நாம் இனங்காண முடியும்.

- ஸ்ரீலங்கா அரசாங்கத்தோடு சமாளித்து, பணிந்து - இந்தப் பணிதலை இணக்கமான அரசியல் என்று கூறிக்கொள்கிறார்கள். - அவர்கள் தருவதை வாங்க வேண்டும் என்கிறது ஒரு தரப்பு.
- இந்திய அரசின் விருப்பப்படி நடந்து அவர்கள் மூலம் ஏதாவது பெற வேண்டும் என்ற காத்திருப்புடன் இருக்கிறது இன்னொரு தரப்பு.

இவர்கள் இரு பகுதியினரும் தமிழர்களின் விருப்பத்தைக் கைவிட்டு விடுகிறார்கள். ஸ்ரீலங்கா அரசின் விருப்பப்படி தமிழர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று ஒரு தரப்பும், இந்திய அரசின் விருப்பப்படி தமிழர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று மறுதரப்பும் தமிழர்களுக்கு போதிக்க முயல்கிறது. அவர்களின் விருப்பப்படி நடந்து அவர்கள் தருவதை தமிழர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே இவர்களுடைய நிலைப்பாடு.

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி இந்த நிலைப்பாட்டை அதாவது மேற்கூறிய இரு பகுதியினரதும் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக எமது முன்னணி மூன்றாவது வழி ஒன்றைக் கூறுகின்றது. நாம் எமது கால்களில் நிற்போம்.

நாம் இதுவரை காலமும் வரித்த கொள்கை உறுதிப்பாட்டோடு நிற்போம். அதாவது, இலங்கையில் சிங்கள மக்களுக்கு உள்ள உரிமைகள் அத்தனையும் தமிழ் மக்களுக்கும் இருக்க வேண்டும் என்ற கொள்கை.

இலங்கையில் சிங்கள மக்கள் ஒரு தேசிய இனம், ஒரு தேசம், அவர்களுக்கு இறைமை உண்டு, தனித்துவம் உண்டு. அதேபோல் தமிழ் மக்களும் ஒரு தேசிய இனம், ஒரு தேசம், எங்களுக்கும் இறைமை உண்டு, தனித்துவம் உண்டு. இந்த இரு இனங்களின் தனித்துவங்களின் அடிப்படையில், இறைமைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடந்து அந்த இரு இறைமைகளையும் கூட்டி ஒரு தீர்வு காண வேண்டும்.

அதையே தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி இரு தேசம் ஒரு நாடு என்று அழைக்கின்றது. 2009 மே இன் பின் தமிழ் மக்களின் சகல தரப்புகளோடும் அதாவது தாயகத் தமிழர்கள், புலம்பெயர்ந்த தமிழர்களோடு தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டே நாம் இந்த முடிவிற்கு வந்திருக்கிறோம். இத்தீர்வு சாத்தியமானதே. நாங்கள் மற்றவர்களின் நலன்களையும் மதித்துக் கொண்டு தமிழர்களின் நலனையும் அடிப்படையாக வைத்து எல்லாத் தரப்புகளோடும் ஈடுபட்டுப் பேசுவோம். எமது நியாயத்தை நிலைநாட்டுவோம். நாம் யாருக்கும் எதிரிகளாக இருக்க விரும்பவில்லை. நமது நியாயத்தை நிலைநாட்ட விரும்புகிறோம். எனவே எமது வழி சாத்தியமானதே என்றார். (ந)

## நிவாரணக்கிராமங்களில் வதிவோர்

# வாக்களிப்பதற்கு வசதி செய்ய வவுனியாவில் விசேட கருமபீடங்கள்

(கொழும்பு)

வாக்களிப்பதற்கு தகுதி பெற்ற இடம் பெயர்ந்தவர்களில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் மற்றும் ஏற்கனவே விண்ணப்பித்து அந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கட்டவர்களுக்குமென வவுனியாவில் விசேட கருமபீடங்கள் ஆரம்பிக்கபட்டுள்ளதாக வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி பீ.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்தார்.

மேற்படி கருமபீடங்களில் தாம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளவர் என்பதையும் மேலும் இடம்பெயர்ந்துள்ள வாக்காளர் என்பதையும் தெரிவித்து வாக்களிப்பதற்குச் செல்ல வேண்டிய வாக்களிப்பு நிலையம் எது என்பதற்கான சான்றை பெற்றுக்கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

2008 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டு வாக்களிப்பதற்கு தகுதி பெற்ற இடம்பெயர்ந்த வாக்களர்களுக்கு என விசேட வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதற்கு இலவச போக்குவரத்து வசதிகளும் வழங்கப்படவுள்ளன.

இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களாக தம்மை பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்கு மட்டுமே இலவச போக்குவரத்து வசதியும் விசேட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கவும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

எனினும் இடம்பெயர்ந்துள்ளவர்களுள் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்த போதும் விண்ணப்பிக்கத் தவறிய அல்லது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களுக்கும் விசேட வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்ல இலவச போக்குவரத்து வசதிகளை செய்து கொடுக்கவும் வன்னிமாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி வவுனியா மெனிக்பாம் நிவாரணக் கிராமங்களிலும் செட்டிக்குளம் நிவாரணக்கிராமங்களிலும் தனித்தனியே விசேட கருமபீடங்கள் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் வவுனியா அரச அதிபர் அலுவலகத் திலும் விடேச கருமபீடம் திறக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பதவிக்காலம் நாளையுடன் நிறைவு

## விசாரணை நடவடிக்கைகள் ஸ்தம்பிதமாகும் நிலை

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் பதவிக்காலம் நாளை வெள்ளிக் கிழமையுடன் காலாவதியாக உள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாணைக் குழுவின் பதவிக்காலம் நிறைவடைவதனால் நிலுவையில் இருக்கும் ஆயிரத்து 727 மோசடிகள் தொடர்பான விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என சுட்டிக் காட்டப்படுகிறது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் தலைவராக அமீர் ஸ்மாயில் மற்றும் பீ. எதிசூரிய மற்றும் இந்திரா டி சில்வா ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த நியமனங்களை வழங்கியிருந்தார்.

17ஆவது திருத்தச்சட்டத்தின் மூலமே விசாரணை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை நியமிக்க முடியும் எனவும் தற்போது அரசியல் சாசன சபை ஒன்று உருவாக்கப்பட்டமையினால் குறித்த ஆணைக் குழுவிற்கான நியமனங்களை மேற்கொள்வதில் சிக்கல் நிலமை உருவாகியுள்ளதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

உரிய நேரத்தில் ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை நியமிக்கத் தவறினால் விசாரணை நடவடிக்கைகள் முழுமையாக ஸ்தம்பிதமடையும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிரேஸ்ட அரசியல்வாதிகள் மட்டும் உயர் அதிகாரிகள் தொடர்பிலான முறைப்பாடுகள் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# வழக்குகள், விசாரணைகளின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 461 பேர் விடுதலை

(கொழும்பு)

வழக்குகள், விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுள் இதுவரை 461 பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாக நீதி, சட்ட மறுசீரமைப்பு முன்னாள் பிரதியமைச்சர் வி.புத்தி சிகாமணி தெரிவித்தார்.

சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட துரித விசாரணைகளை அடுத்து இவர்கள் விடுவிக்கப் பட்டதாக அவர் கூறினார்.

விசாரணைகள் எதுவுமின்றி சிறைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பது தொடர்பில் பதினொரு சட்டத்தரணிகளை விசேடமாக நியமித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கைதிகளின் கோவைகள் தனித்தனியே ஆராயப்பட்டு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து கைதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு இதுவரை 461 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 200 பேரின் கோவைகள் ஆராயப்பட்டு வருவதாகவும் இவர்களுள் வழக்குகள் பதிவு செய்ய அவசியமில்லாதவர்கள் விடுவிக்கப்படுவார்களென்றும் முன்னாள் பிரதியமைச்சர் கூறினார். (ஓ-6)

# யுவதிகள் இருவர் நீரில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

மட்டக்களப்பு வாகனேரி பகுதியில் அமைந்துள்ள வணக்கஸ்தலம் ஒன்றுக்கு உறவினர்களுடன் சென்ற பாடசாலை மாணவியும் மற்றுமொரு யுவதியும் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

வாழைச்சேனை ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த பிறைந்துறைச்சேனை அல் அஸ்ஹா வித்தியாலயத்தில் தரம் 09இல் கல்வி கற்று வந்த மாணவி இஸ்மாயில் நஜீலா (14 வயது ) மற்றும் இஸ்மாயில் முஸ்தபா பாத்திமா சிபாயா (24 வயது) ஆகிய இரு யுவதிகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ஓ-6)




# இயேசுநாதரின் படத்தை பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்த வேண்டாம்

## அதிமேற்றிராணியாரின் பணிப்பாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இயேசுநாதரின் படத்தை பயன்படுத்த வேண்டாமென கொழும்பு அதிமேற்றிராணியாரின் ஊடகப் பணிப்பாளர் சகல அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் பிரசாரத்துக்கான சுவரொட்டியில் ஒரு அரசியல் கட்சி இயேசுநாதரின் படத்தைப் பயன்படுத்தியுள்ளமை குறித்து கிறிஸ்தவ சமூகம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு அதிமேற்றிராணியாரின் ஊடகப் பணிப்பாள் சிறியானந்த பெர்னாண்டோ விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2010 மார்ச் 22 ஆம் திகதி வெளியான செய்திப் பத்திரிகையொன்றில் இயேசுநாதரின் படத்துடன் ஒரு வேட்பாளருடைய சின்னத்தையும் இணைத்துழு கீழ்வரும் தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

தாங்கமுடியாத துயரங்களிலிருந்து விடுதலை பெற ஆலயம் நோக்கிச் செல்பவர்கள் இவ்வாறு பிரார்த்தனை புரிகின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் சகல இலங்கை மக்களினதும் விடுதலைக்காக இரத்தக்கண்ணீர் வடித்த அவரது விடுதலைக்காக கடவுளின் குமாரர் ஆசீர்வதிக்க வேண்டும். முழுமனதுடன் உங்கள் வாக்குகளை ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வழங்குங்கள்.

இக்கட்சியினர் மேற்கொண்டுள்ள இவ்வாறான தேர்தல் பிரசாரத்தை முழு கத்தோலிக்க சமூகமும் அதிருப்தியை தெரிவிப்பதோடு வன்மையாகக் கண்டிக்கின்றது.

தாம் விரும்பிய கட்சிக்கோ அல்லது வேட்பாளருக்கோ வாக்களிக்க ஒவ்வொரு கத்தோலிக்கரும் உரிமையுண்டு. ஆனால் அதற்கான பிரசாரத்துக்கு இயேசுநாதரின் படத்தைப் பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாதெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ஓ-6)

### ஓராண்டாகியும் உன் திருவதனம் காண ஏங்கி நிற்கின்றேன்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 | 25 |
| 06 | 03 |
| 1987 | 2009 |



**செல்வன் திவாகரன் தர்மராசா (திவா)**

வன்னி மண் பெற்றெடுத்த மங்காத குலவிளக்கே
ஓர்நொடிப் பொழுதில் மங்கிப் போனதன்.
மர்மம் தான் என்னவோ?
தங்கச்சியின் கல்விக்காய்
இறுதிவரை உழைப்பேன் என்றாயே
உன் தங்கை பல்கலை வாசல் படியை தாண்டுமுன்பே
சிவனடியில் உறைந்து விட்டாயே
ஆசையால் அழைத்திட
அன்னையில் மறுவடிவாய் ஆன
என் செல்லக் குட்டியே
ஒருகணப் பொழுதேனும் எமைவிட்டுப் பிரியாத நீ
ஓராண்டாகியும் எம்மிடம் வராததன்
காரணம் தான் புரியவில்லை.

நிரந்தர விலாசம்
இல.477 /11 ஆம் யூனிட் ,
தர்மபுரம் ,
கிளிநொச்சி .

. உன்பிரிவால் வாடி நிற்கும்
பாசத்தங்கை தயாரூபினி (யாழ் பல்கலைக்கழகம்), மற்றும் அம்மா
அப்பா , அக்கா, தம்பி.

(940)

# யுனிசெவ் - நிலையறி மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் அனுசரணையுடன் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இயங்கும் பாடசாலைகளில் தரம் 03 முதல் 09 வரை கற்கும் மாணவர்களிற்கான நிலையறி மதிப்பீடு கணிதம், தமிழ் மற்றும் அடிப்படைத் தேர்ச்சிகள் நாளை வெள்ளிக்கிழமை பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

மாணவர்களிற்கு பாடசாலை அதிபர்கள் இதனை அறிவிப்பதுடன் இது தொடர்பான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வினாத் தாள்கள் பொதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர் அல்லது பொருத்தமான ஆசிரியர்கள் வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 2.00 மணியளவில் இடம்பெறும் கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

# விடுதலைப்புலிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் தமிழகத்திற்கு கடத்தப்படுவதாக விசாரணை

(இராமநாதபுரம்)

இலங்கையில் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் கடல் மார்க்கமாக தமிழகத்திற்குள் கடத்தி வருவதாக கிடைத்த தகவலின் படி கியூப் பிரிவு பொலிஸார் கடலோர பகுதிகளில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்தபின் அங்கு விடுதலைப்புலிகள் வைத்திருந்த ஆயுதங்கள் பல்வேறு இடங்களில் புதைக் கப்பட்டு இருப்பதாகவும் அவற்றை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிலர் புரோக்கர்கள் உதவியுடன் தமிழகத்திற்கு கடத்தி வருவதாகவும் தகவல்கள் வந்துள்ளன.

இந்த ஆயுதங்கள் இங்கு விற்பனை செய்யப்படுகிறதா தீவிரவாத செயல்களுக்கு பயன்படுகிறதா என்பது தெரியாமல் பொலிஸாரும் குழப்பத்தில் உள்ளனர்.

கியூ பிரிவு அதிகாரி ஒருவர் கூறியதாவது,

தமிழகத்திலிருந்து ஆயுதம் தயாரிக்க தேவையான பொருட்களை முன்பு இலங்கைக்கு கடத்தினர். தற்போது இலங்கையில் விடுதலைப்புலிகள் பயன்படுத்திய ஆயுதங்களை இங்கு கடத்தி வருகின்றனர். கடந்த சில மாதங்களுக்கு முன் கீழக்கரையில் ஹவாலா பணத்துடன் பிடிபட்ட நபரிடம் கைப்பற்றப்பட்ட தோட்டாக்கள் இலங்கையிலிருந்து வந்தது. மேலும் சிலர் இதுபோன்ற கடத்தலில் ஈடுபடுவதாக தெரிகிறது. அவர்கள் குறித்து இரகசியமாக கண்காணித்து வருகிறோம். இங்கு எதற்கு கடத்துகின்றனர் என்பது குறித்ததகவல் கிடைக்கவில்லை. இவ்வாறு அந்த அதிகாரி கூறினார். (ஓ-6)

# யாழ். முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் தமது இருப்பிடங்களில் மீளக் குடியமர்த்துவதற்குரிய பணிகளை கட்டம் கட்டமாக முன்னெடுத்து வருவதாக யாழ். மாநகர சபை உறுப்பினரும் மக்கள் பணிமனைத் தலைவருமான பி.ஏ.எஸ்.சுபியான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதற் கட்டமாக 100 குடும்பங்களுக்கே இவ் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது.


இதன் அடிப்படையில் கடந்த மாத நடுப்பகுதியில் காணிகளுக்கு பொறுப்பாகவுள்ள குடும்பத்தலைவர்கள் வெளிமாவட்டங்களிலிருந்து இங்கு வரவழைத்து தங்கள் காணிகளை இனங்கண்டு நிலங்களின் அளவுகளும் ஆராயப்பட்டன.

இச் செயற்பாட்டினை அப்பகுதியில் உள்ள கிராம சேவகர் ஊடாக யாழ். பிரதேச செயலர் மூலம் யாழ். மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக 45 பேரை அழைத்து வந்து மீளக்குடியேறுவதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இம்மக்கள் தங் கள் காணிகளை துப்பரவு செய்யவும் காணிக ளில் இருந்தவாறே வீட்டை அமைத்துக் கொடுத்து அவர்களுக்குரிய குடிநீர் , மலசகூட வசதி போன்ற வசதிகள் ஏற்படுவதுடன் அவர் களுக்குரிய தொழில் முயற்சி கிடைப்பதற் குரிய ஒழுங்களும் மேற்கொள்ளப்படும் என வும் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் இப்பணிகள் ஆரம்பிக்க இருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஓ-6-30)

போரினால் சிதைக்கப்பட்ட
தாயகத்தின் இயற்கை
வளங்கள் அபிவிருத்தியின்
பெயராலும் சூறையாடப்பட்டு
வருகின்றது இந்நிலையில்,
தமிழ்த் தேசிய
அரசியலில்
ஒரு சூழலியலாளனும்
தேவை!

பொ.ஐங்கரநேசன் MSc, PGDJMC

இலங்கைத் தமிழரசுக் கட்சி
2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!!
பழைய மாணவர்கள்-யூனிவேர்சல்



# மாபெரும் பொதுக்கூட்டம்



காலம் :- 26.03.2010 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி
இடம்:- சாவல்கட்டு கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்க முன்றல்

கௌரவ சமூக சேவைகள் அமைச்சர்
திரு. கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களை
சேவைநலன் பாராட்டி கௌரவிக்கும் விழாவும்
மாபெரும் பொதுக்கூட்டமும்

திரு. பசுபதி சீவரட்ணம் (ஜீவா), E.P.D.P.தேசிய அமைப்பாளர்
திரு. சந்திரகுமார் முருகேசு
ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அனைத்து கடல் தொழிலாளர்களையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு:- *மகாத்மா சனசமூக நிலையத்திலிருந்து சாவல்கட்டு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கௌரவ அமைச்சர் அவர்கள் மேள வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.*

அனுசரணை:-
- சாவல்கட்டு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
- சாவல்கட்டு அனைத்து ஆலய பரிபாலன சபையினர்
- முருக மூர்த்தி விநாயகர் தேவஸ்தானம், சாவல்கட்டு
- மகாத்மா சனசமூக நிலையம்
- வெரிட்சோன் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) (E.P.D.P பொறுப்பாளர், மானிப்பாய்)

விளம்பர அனுசரணை:-
YSS பிளாஸ்ரிக் & மரவள்ள தொழிற்சாலை

(946)

## கல்விமாணி பாடநெறிக்கான விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி முதலாம் வருட தமிழ் மொழி மூல பாடநெறிகளுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது என தேசிய கல்வி நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (6-4)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஓய்வு பெற்ற நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளரும் தமிழறிஞருமான கே.வி. குணசேகரம் எழுதிய *பிரமமாய் நின்றசோதி* என்னும் நூல் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் ஆய்வுரையை இரா. செல்வவடிவேல் நிகழ்த்தவுள்ளார். (ஓ-4)

# இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்ற இந்தியா ரூ.18 கோடி செலவிட்டுள்ளது

## இந்திய தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளுக்காக இந்தியா ரூபா 18 கோடி செலவிட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியத் தூதரகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப்புலிகளை எதிர்த்து இலங்கை இராணுவம் மேற்கொண்ட சண்டை கடந்த ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. விடுதலைப்புலிகள் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டுவிட்டதாக இலங்கை அரசு அறிவித்தது.

இந்த சண்டையின் போது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வசித்த தமிழர்களை இலங்கை அரசு சிறப்பு முகாம்களுக்கு மாற்றியது.

போர் முடிவுக்கு வந்ததால், முகாம்களில் வசிக்கும் தமிழிர்களை அரவவர் சொந்த இடங்களில் குடியமர்த்தும்படி இலங்கையை இந்தியா வலியுறுத்தி வருகிறது. முகாம்மில் உள்ளவர்கள் அனைவரையும் சொந்த இடங்களுக்கு உடனடியாக அனுப்பிவிட முடியாது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் புலிகள் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடிகளை முழுமையாக அகற்ற வேண்டியிருப்பதால் தாமதம் ஏற்படும் என்று இலங்கை ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

தற்போது இந்தியாவின் துணையுடன் கண்ணிவெடி அகற்றப்படுகிறது. முகாம்களில் உள்ளவர்களில் பெரும்பான்மையானோர் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் இந்தியாவிலிருந்து 7 குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன. இந்தக்குழுக்கள் பணியாற்றிவரும் ஒட்டுசுட்டான், கதாலியர்ஸ், அம்பான் குளம் உள்ளிட்ட பகுதிகளை இந்தியத் தூதர் அசோக் கே.காந்தா இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அதுல ஜெயவர்த்தன உள்ளிட்டோர் சென்று பார்வையிட்டனர்.

இதுவரையில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் சுமார் 63 கோடி சதுர மீற்றர் பரப்பளவு பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இனிமேல் இந்தப் பகுதிகளில் தமிழர்களை மீண்டும் குடியமர்த்தலாம். விவசாயப் பணிகளையும் மேற்கொள்ளலாம் என்று இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இன்னும் சில பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. இதுபற்றிய ஆய்வு தொடர்ந்து நடந்துவருகிறது. மற்ற இடங்களில் தமிழர்களை குடியேற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


கண்ணிவெடி அகற்றல் பணிகளை இந்தியத் தூதர் பார்வையிட்டபோது அவரிடம், கண்ணிவெடி அகற்றும் குழுக்கள் சார்பில் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்த அளவுக்கு இந்தப் பணி வெற்றிகரமாக முடிந்துள்ளது. இன்னும் முடிக்க வேண்டிய பணிகள், இலங்கை தரப்பில் அவர்களுக்கு இடப்பட்டுள்ள பணிகள் பற்றி விவரமாக எடுத்துக் கூறப்பட்டன.

கண்ணிவெடி அகற்றும் பணி உயிருக்கு ஆபத்து தரக்கூடியது என்பதால், அதையெல்லாம் மிக்க நிபுணத்துவத்துடன் கையாள்வது பற்றியும் இந்தியத் தூதரிடம் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் எடுத்துரைத்தனர்.

கண்ணிவெடிகள் எப்படி அகற்றப்படுகின்றனவென்பதும் நேரடியாக செய்து காண்பிக்கப்பட்டது. பரந்தன், புளியங்குளம், வட்டக்கந்தல், பெரியபுளியங்குளம், நைனாமடு உள்ளிட்ட பல இடங்களில் கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டுவிட்டன. கண்ணிவெடி அகற்றும் குழுவில் இந்தியாவிலிருந்து 173 பேரும், இலங்கையிலிருந்து 172 பேரும் இடம்பெற்றுள்ளனர். இது தவிர நவீன இயந்திரங்கள், கண்ணிவெடிகளை கண்டுபிடிக்க உதவும் கருவிகள், உடல் பாதுகாப்பு கவசம் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. (ஓ-6)

# புதிதாக 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை

## ஜி.எல்.பீரிஸ் தகவல்



(கொழும்பு)

புதிதாக 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக வங்கியின் அழுத்தத்துக்கு ஏற்ப கடந்த அரசாங்கம் தொழில் வாய்ப்புக்களைக் குறைத்த போதும் பதவியிலுள்ள அராங்கம் அந்த அழுத்தத்தை பொருட்படுத்தாமல் 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது.

அத்துடன் மேலும் 17ஆயிரம் பட்டதாரிகளுக்கு புதிதாக தொழில்வாய்ப்பு வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற கூட்டம் ஒ ன் றி 6 உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறுகை யில்,

தொழில்வாய்ப்புப் பெறுவதற்கான தகுதியுடைய ஒவ்வொரு 17 பேரில் ஒருவர் அரசாங்க உழியராக உள்ளார். குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்குள் தனிநபர் வருமானத்தை 2270 அமெரிக்க டொலராக உயர்த்தக்கூடிய சாத்தியத்தை இந்த அரசாங்கமே உருவாக்கியது என மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# நாட்டின் தேயிலை உற்பத்தி 82.5 சதவீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தேயிலை உற்பத்தி கடந்த வருடத்தை விட 82.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளுதாக இலங்கை தேயிலைச் சபையின் தலைவர், லலித் ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 1 கோடி 28 இலட்சத்து 81 ஆயிரத்து 691 கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டதாகவும் இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் தேயிலை உற்பத்தி 2கோடி 36 இலட்சத்து 8 ஆயிரத்து 12 கிலோ கிராமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்படி கடந்த வருடத்தைவிட இவ்வருடம் 1 கோடி 06 இலட்சத்து 26 ஆயிரத்து 321 கிலோ கிராம் அதிக தேயிலை உற்பத்தி கிடைத்துள்ளதாகவும் இது 82.5 சதவீத அதிகரிப்பென்றும் அவர் குறிப்பிட்டார்.


தாழ்ந்த நிலப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கு மத்திய கிழக்கு மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளில் அதிக கேள்வியுள்ளதாகவும் அவர் கூறினார்.

வருடமொன்றுக்கு இலங்கையில் 300 முதல் 320 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)


ஜெய்குருதேவ்

THE ART OF LIVING

வாழும் கலையின் மீள் நினைவூட்டல் பயிற்சி



யோகா, தியானம், சுதர்சனக் கிரியா உள்ளடக்கியது.

இடம்:- கம்பன் கோட்டம் -நல்லூர்

காலம்:- 28.03.2010 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்:- காலை 9.00 முதல் மாலை 5.00 மணிவரை

பயிற்சிபெற்ற அனைவரையும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு:- 26.03.2010 இற்கு முன்பாக முன்பதிவுகளை மேற்கொள்ளவும்.

மதிய உணவு வழங்கப்படும்.

நன்கொடை ரூபா 200/-

தென்மராட்சி பதிவுகளுக்கு 0777078349

வடமராட்சி பதிவுகளுக்கு 0773954128

தொ.பே.:- 021 222 7030
0771 777 998

(945)



தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010



தாய் நாட்டைத் தாரை வார்த்தேனும் தனி வீடு பெற்றிட வேண்டும்... என்று தமிழரை ஏமாற்றும் தலைமையை நிராகரித்து புதிய வரலாறு எழுத வாக்களிப்போம்...
தமிழ்த் தேசியத்திற்காய் வாக்களிப்போம்
தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணிக்கு வாக்களிப்போம்...
தனித்தலைவன் மாமனிதன் குமார் வழியே தேசியத் தலைவன் வழி செல்லும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை பெருவெற்றி பெறவைப்போம்.

திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

2

"நம்புங்கள் நாளை நமதாகும்"

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | X

இளைஞர் கழகம்-யாழ்ப்பாணம்

அகங்காரம் பலவீனமாகும். அது அமைதியை அழித்துவிடும். -சிவானந்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தியாகி திலீபனின் சிலையை உடைத்தவர்களின் உள்நோக்கம் என்ன?

நல்லூரில் அமைந்திருந்த தியாகி திலீபனின் நினைவுத்தூபி இனந்தெரியாதவர்களால் உடைத்தெறியப்பட்டுள்ளது.

தியாகி திலீபன் அகிம்சைவழியில் உண்ணாவிரதம் இருந்து தன்னுயிர் நீத்தவர். அவரின் அகிம்சைப் போராட்டம் இலங்கை அரசுக்கு எதிரானதல்ல. அது இந்திய அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரானது.

இவையெல்லாம் இங்கு வியாக்கியானம் செய்யப்பட வேண்டிய விடயங்கள் அல்ல.

இதற்கு அப்பால் தியாகி திலீபனின் சிலையை உடைத்தவர்கள் யார்? அவர்களுக்கு தூபியை உடைக்கும் அதிகாரத்தைக் கொடுத்தது யார்?

இவர்கள் வர்த்தகம் என்ற நோக்கில் இன்னும் பற்பல நாசகாரங்களைச் செய்வதற்கு யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்திருக்கிறார்களா?

இதுபோன்ற பல கேள்விகள் தமிழ் மக்கள் முன் நிற்கின்றன.

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் முடிந்து சமாதானத்தை நோக்கி நாடு நகர்வதாகக் கூறப்படும் இவ்வேளையில், ஒரு இரவில் எவருக்கும் தெரியாமல் தியாகி திலீபனின் தூபியை உடைத்ததன் மூலம் இதைச் செய்தவர்கள் இந்த நாட்டில் எதைச் சாதிக்க முற்படுகின்றார்கள்.

துட்டகைமுனுவின் பரம்பரை என்று கூறிக் கொள்பவர்கள் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வது அவ்வளவு நல்லதல்ல.

வன்னிப் போருக்குப் பின்னர் இலங்கைத் திருநாட்டில் எல்லா இனமக்களும் இணைந்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு சமாதான சகவாழ்வை ஏற்படுத்தும் வழிவகைகளைக் காண விழையவேண்டும்.

இதைவிடுத்து ஒரு இனத்தை நோகடிக்கும் வகையில் நடந்து கொள்வது பொருத்தமானதல்ல.

இரவோடு இரவாக தியாகி திலீபனின் நினைவுத் தூபியை உடைத்தவர்கள்-தரைமட்டமாக்கியவர்கள், நாளை இந்த மண்ணில் எதுவும் செய்வார்கள் என்ற அச்சம் ஏற்படுவதில் எந்தத் தவறும் இல்லை.

நல்லூரில் உண்ணாவிரதம் இருந்து அந்த மண்ணில் உயிர்நீத்த தியாகி திலீபனை எவரும் தங்கள் பகைமைக்குள் நின்று விமர்சிக்க மாட்டார்கள் என்றே கருதுகின்றோம்.

எனவே இது தொடர்பில் சரியான விளக்கங்களை, விசாரணைகளை நடத்துவது அவசியம்.

ஒரு இனத்தின் வரலாற்றுக்கான அடையாளங்களை முகவரிகளை உடைத்தெறிவதென்பது சாதாரணவிடயமன்று. இது தொடர்பில் நீதி விசாரணை தேவை.

இந்த விசாரணையை யாழ்ப்பாணத்தின் நீதி பரிபாலனம் துணிச்சலுடன் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்கள் தங்கள் மனங்களுக்குள் புழுங்கிக் கொண்டிருக்கும் மிகப்பெரிய அழுத்தங்கள் சீர்மைப்படும்.

# மீளக்குடியமர்ந்த மக்களிற்கான வாழ்வாதார உதவுதொகை வழங்கல்

தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் நீகோட் ஊடாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களிற்கு தலா 25 ஆயிரம் ரூபா உதவுதொகை பதினெட்டாவது நாளாக இன்று வழங்கப்படுகிறது.

கிராம சேவகர், பிரிவுகளும் அக்கிராம சேவகர் பிரிவுகளில் வசிப்போர் அனுமதிக்கடிதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய இடங்களுக்கும் வருமாறு,

**பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு**

ஜே/383, ஜே/384, ஜே/385, ஜே/386, ஜே/387, ஜே/388, ஜே/389, ஜே/390, ஜே/391, ஜே/392, ஜே/393, ஜே/394, ஜே/395, ஜே/396, ஜே/397, காலை 9 மணி பருத்தித்துறை பிரதேச செயலர் பணிமனை ஜே/398, ஜே/399, ஜே/400, ஜே/401, ஜே/402, ஜே/403, ஜே/405, ஜே/406, ஜே/407, ஜே/408,ஜே/409, ஜே/410, ஜே/411, ஜே/412, ஜே/413, ஜே/414, ஜே/415, ஜே/416, ஜே/417, மதியம் ஒரு மணி பருத்தித்துறை பிரதேச செயலர் பணிமனை.

**சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவு**

ஜே/288, ஜே/289, ஜே/290, ஜே/291, ஜே/292, ஜே/293, ஜே/294, ஜே/295, ஜே/296, ஜே/297, ஜே/298, ஜே/300, ஜே/301, ஜே/302,ஜே/303, ஜே/304, ஜே/305,ஜே/306, ஜே/307, ஜே/308, ஜே/309, ஜே/310,ஜே/311, ஜே/312, ஜே/313,ஜே/314,ஜே/315,ஜே/316, ஜே/317, ஜே/318, ஜே/319, ஜே/320, ஜே/321, ஜே/322,ஜே/323, ஜே/324, ஜே/325, ஜே/326, ஜே/327, ஜே/328, ஜே/329, ஜே/331, ஜே/332, ஜே/334, ஜே/335, ஜே/336, ஜே/337, ஜே/338, ஜே/339, ஜே/340, ஜே/341, ஜே/342, ஜே/343, ஜே/344, ஜே/345, ஜே/346, ஜே/347, காலை 9 மணி சாவகச்சேரி பிரதேச செயலக மண்டபம்.

**கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவு**

ஜே/348, ஜே/349, ஜே/350, ஜே/351, ஜே/352, ஜே/353, ஜே/354, ஜே/355, ஜே/356, ஜே/357, ஜே/358, ஜே/359, ஜே/360, ஜே/361, ஜே/362, ஜே/363, ஜே/364, ஜே/365, ஜே/366, ஜே/367, ஜே/368, ஜே/369, ஜே/370, ஜே/371, ஜே/372, ஜே/373, ஜே/374, ஜே/375, ஜே/376, ஜே/377, ஜே/378, ஜே/379, ஜே/380, ஜே/381, ஜே/382, காலை 9 மணி கரவெட்டி பிரதேச செயலர் அலுவலகம் (எ-14)

# லசந்த படுகொலைச் சம்பவம்
## டிரான் அலஸிடம் விசாரணை

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பில் பிரபல வர்த்கர் டிரான் அலஸிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் டிரான் அலஸிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. லசந்த படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர், டிரான் அலஸிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

லசந்த படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர், டிரான் அலஸிற்கும் லசந்தவிற்கும் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி விக்ரமதுங்க இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் அத்திட்டிய பிரதேசத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் டிரான் அலஸிற்கும், லசந்தவிற்கும் இடையில் தொலைபேசி உரையாடலொன்று இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# பசுக்கொலைக்கு அஞ்சி பாரதம் சென்ற ஸ்ரீலஸ்ரீ சுவாமி ஞானப்பிரகாசர்

**இன்று சுவாமி ஞானப்பிரகாசரின் குருபூசை தினம்**

சைவமும் தமிழும் சிறப்புற விளங்கும் யாழ்ப்பாணத்து திருநெல்வேலி புனிதம் மிக்க புண்ணிய பழம் பதியாகும். இங்கு சைவச்சான்றோன் காராளபிள்ளை என்பவருக்கு மகனாக அவதரித்தவர், சுவாமி ஞானப்பிரகாசர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் மூதாதையர்.

யாழ்ப்பாணத்தை அரசாண்ட பறங்கிக்காரர் காலத்தில் ஒவ்வொரு வீட்டாரும் ஒரு பசுவை உணவுக்காகக் கொடுக்க வேண்டும் என்ற சட்டம் இருந் தது. இவர்களின் ஆட்சிக் காலத்தில் வாழை இலையில் சாப்பிடுவதே சமயத்துரோகம். பசுக் கொலை ஒரு பெரிய புண்ணியம் என்ற நியதி இருந்தது.

இந்தக் கொடுமைகளைச் சகிக்க முடியாமல் இரவோடு இரவாக பாக்குநீரிணை ஊடாக நீந்தி வேதாரணியக் கரையை அடைந்தார், ஞானப்பிரகாசசுவாமிகள். வேதாரணியம் சென்று அங்கு பல தொண்டுகள் செய்து திருப்புகலூர் சென்றார். அங்கு ஆதிசைவ பிராமண அண்ணாசாமி ஆசாரியரிடம் சிவதீட்சை பெற்றார். பின்னர் சிதம்பரம் சென்று வழிபாடு இயற்றி வந்தார். சிவகாமியம்மை சமேத நடராசப் பெருமான் சந்நிதியில் 49 நாட்கள் கடும் தவம் இயற்றினார். காவியுடை, கசாய வஸ்திரம் அணிந்து துறவற தர்மத்தை மேற்கொண்டார். சுவாமியின் திருவருளால் புதையல் கிடைத்தது. இந்தப் புதையல் கொண்டு சிதம்பரத்தில் குளம் அமைத்தார். இதுவே இன்றும் *ஞானப்பிரகாசர் குளம்* என்னும் திருப்பெயர் கொண்டு விளங்குகிறது.

இவர் நீர்வேலி சிவசங்கர பண்டிதரால் *பூரண சிவானு பூதிமான்* எனப் போற்றி புகழப்பெற்றார். 1963 ஆம் ஆண்டு வெளிவந்த அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழா மலரில் சுவாமி ஞானப்பிரகாச முனிவர் பற்றி ஒரு சிறப்பான கட்டுரையை பண்டிதமணி எழுதியுள்ளார். மேலும் உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை தாம் இயற் றிய ஈழமண்டல சதகத்தில் 4 செய்யுளில் முனிவர் பற்றி குறிப் பிட் டுள்ளார்.

இவர் வடமொழியில் சித்தாந்த சிகாமணி, பிராமண தீபிதை போன்றவற்றையும் பௌட்கராகம் விருத்தி, சிவஞான போத விருத்தி ஆகியனவற்றுக்கு உரையும் செய்துள்ளார். தமிழிலே சிவஞானசித்தியாருக்கு ஒரு சிறந்த விருத்தி உரை செய்திருக்கிறார்.

பெரும் ஞானியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி ஞானப்பிரகாச முனிவர் பங்குனி மாதத்து பூசநட்சத்திரத்தில் சிதம்பர தலத்தில் சிவபதம் எய்தினார். சுவாமிகளின் சிலை ஞானப்பிரகாசர் குளத்துக்கு அருகில் இன்றும் காணப்படுகின்றது. மிகு சைவத்துறை நம் நாட்டில் விளங்க முனிவரின் குருபூசை நாளில் பிராத்திப்போமாக.

கா.சிவபாலன்

# நன்மையும் தீமையும் எனக்கொன்றே-பாபா

போதிமாதவன் புத்த பெருமான் தனது சிஷ்யர்களுடன் இரண்டு கிராமங்களைக் கடந்து காடு நோக்கி சென்று கொண்டிருந்தார். முதல் கிராமத்தை நோக்கி சென்ற போது அவ்வூர் மக்கள் இவர்களை வசை மொழி கூறி நிந்தித்தனர். சிஷ்யர்கள் பெருமானாரிடம் இதைப்பற்றி முறையீடு செய்தனர். பெருமானார் அதனை நீங்கள் உங்கள் செவிகளில் போட்டுக்கொள்ளாதீர்கள் என்றார். அவர்களும் அப்படியே செய்தனர்.

அடுத்த கிராமத்தைச் சேர்ந்த போது அக்கிராம மக்கள் அவர்களை வரவேற்று இனிப்புப் பண்டங்களை நீட்டினர். இதனைப் பார்த்த பெருமானார் இதனையும் ஏற்கவேண்டாம் என்றார்.அவர்களும் அதனை ஏற்று நடந்தனர். கிராமத்தைக் கடந்து காட்டின் எல்லையை அடைந்த போது சிஷ்யர்கள் பெருமானாரிடம் ஒரு கிராமத்தார் திட்டியதையும் ஏற்கவேண்டாம் என்றீர்கள். இன்னொரு கிராமத்தார் வரவேற்றதையும் ஏற்க வேண்டாம் என்றீர்கள். இதன் காரணம்? சுவாமி அவர்கள் தான் இவர்கள் , இவர்கள் தான் அவர்கள். போற்றுபவர்கள், பின்பு ஒருகாலம் தூற்றுவதும் தூற்றுபவர்கள் பின்பு போற்றுவதும் மனித வாழ்வை ஒத்த நிரந்தரமற்றதொன்றாகும். இவைகளை ஏற்றுக்கொள்ளா விடில் நமக்குத் துன்பம் இல்லை என்றார் போதிமாதவன்.

இறைவனையே கொலை செய்யும், இறைவனையே கல்லால் எறியும், இறைவனையே சொல்லால் அடிக்கும் மனித சமுதா யம் நிமிர்த்தமுடியாத நாய்வாலுக்கு ஒப்பானது என்கிறார் பகவான் பாபா.



தற்போதைய குழந்தைகளாக, நாளைய சந்ததியினராக வரவிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கே நான் யார் என்பதும் எனது வாழ்க்கை முறை என்னவென்பதும், எனது உபதேசம் எதைப்பற்றியது என்பதும் தெரிய வரும்.

தற்போது நான் செய்த உபதேசம் புறக்குடத்தில் நீராக , நீங்கள் என்னைப் புரிவதற்காக நான் செய்த சங்கற்பங்கள் யாவும் அனுபவித்த அன்றே மறந்ததொன் றாக, தீமைக்கு வால் ஒட்டி, இறக்கை கட்டி பறக்க விடும் மனிதன் இவன்.

இதற்காகவே பாலவிகாஸ் என்னும் பள்ளியை உருவாக்கி இளம் பராயத்திலேயே அவர்களிடம் என் உபதேசங்களை பரவச்செய்வதற்கு வழி சமைத்துள் ளேன். இக்குழந் தைகளின் திறன் வெளிப்படும் காலம் இவ்வுலகில் மிகவும் அமைதியும் சமாதானமும் நிறைந்த காலமாக காணப்படும். பூமி சுவர்க்க புரியாக தெரியவரும்.

ஜெய்சாயிராம் யாதவன்

# அமெரிக்காவில் இந்திய மாணவர் சுட்டுக்கொலை

அமெரிக்காவில் ஒரு கடையை கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்த போது நடந்த சம்பவத்தில் அந்த கடையில் பகுதிநேர வேலை பார்த்த இந்திய மாணவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆந்திராவில் உள்ள ஐதராபாத்தை சேர்ந்த மாணவர் பிரசாந்த் கோய்நகா. 28 வயதான இவர் பி.காம் படித்து முடித்து இருக்கிறார்.

எம்.பி.ஏ. படிப்பதற்காக 2 மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா சென்றார். கலிபோர்னியா மாநிலத்தில் சன்னிவேல் நகரில் உள்ள சர்வதேச டெக்னாலஜி யுனிவர்சிட்டியில் எம்.பி.ஏ. வகுப்பில் சேர்ந்தார்.


அவர் அங்கு படித்துக்கொண்டே ஓய்வு நேரத்தில் ஓக்லஹாமா நகரில் உள்ள ஒரு கடையில் பகுதிநேர வேலைக்கு சேர்ந்தார். 3 நாட்களுக்கு முன்பு தான் அவர் அந்த வேலைக்கு சேர்ந்தார்.

இரவு 7.15 மணி அளவில் 2 பேர் அந்த கடைக்குள் வாடிக்கையாளர்கள் போல நுழைந்தனர். அவர்கள் அங்கு இருந்த பிரசாந்தை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர்.

அதன்பிறகு அங்கு இருந்த பணத்தை கொள்ளையடித்துக்கொண்டு தப்பி ஓடி விட்டனர்.

இது தொடர்பாக ஓக்லஹாமா நகர பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். (6)

# நடிகர் அமிதாப்பச்சனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



ஹொங்ஹொங்கில் நடைபெற்ற ஆசிய திரைப்படவிழாவில் இந்தியத் திரைப்பட நடிகர் அமிதாப்பச்சன் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஹொங்கொங்கில் 4ஆவது ஆசிய திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெற்றது.

ஹொங்கொங் பிரதிநிதிகள் சபை மற்றும் கண்காட்சி மையத்தில் நடைபெற்ற இவ் விழாவில் ஆசியாவின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நடிகர்கள் கலந்துகொண்டனர்.

சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக திரையுலகில் பணியாற்றியதற்காக அமிதாப்பிற்கு இவ் விருது வழங்கப்பட்டது.

இதேபோன்று சிறப்பாக பணியாற்றியதற்காக சீனத்திரைப்பட இயக்குநர் ஜாங் இமாயூக்கும் சிறப்பு விருது வழங்கப்பட்டது. (6)

# பரீட்சை முடிவுகளால் மனம் தளரக் கூடாது

## முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அறிவுரை

(புதுடில்லி)



பரீட்சைமுடிவுகளை, வாழ்வின் இறுதிக்கட்ட பிரச்சினையாகக் கருதக் கூடாது. பரீட்சை முடிவுகளால் யாரும் மனம் தளரக் கூடாது. கடவுள் நம்முடன் இருந்தால், யாரும் நமக்கு எதிராகச் செயல்பட முடியாது என முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், மாணவர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், மாணவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அதில்கூறப்பட்டுள்ளதாவது,

என் கல்வி காலத்தில், எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பிளஸ் 2, பி.எஸ்.சி. மற்றும் ஏரோ நாட்டிகல் இன்ஜினியரிங் ஆகிய ஐந்து முக்கிய பரீட்சைகள் எழுதியுள்ளேன். இந்த பரீட்சை முடிவுகள், பெரும்பாலும் என் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் இருந்ததில்லை.

உங்களுக்கு ஒரு முக்கியமான விடயத்தைக் கூற விரும்புகின்றேன். நம் வாழ்க்கையில் பரீட்சை முடிவுகளை இறுதிக்கட்டப் பிரச்சினையாகக் கருதக்கூடாது. முதல் தடவை சரியாக எழுதவில்லை என்றால், அடுத்தமுறை சரியாக எழுதி வெற்றி பெற வேண்டும். வெற்றி என்பது மகிழ்ச்சியை தரக்கூடிய விடயம் தான்.ஆனால் பரீட்சை முடிவுகளால் சில நேரங்களில் பின்னடைவு ஏற்படும்.

ஆசிரியர்களின் அறிவுரைகளை பின்பற்ற வேண்டும். எந்த ஒரு பிரச்சினையையும், நம்மை ஆதிக்கம் செலுத்த விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு மாறாக பிரச்சினைகள் மீது நாம் ஆதிக்கம் செலுத்த வேண்டும்.

இதன்மூலம் பிரச்சினைகளை தோற்கடித்து, வெற்றிபெற முடியும். எதிர்பாராத பிச்சினைகளை தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். கடவுள் நம்முடன் இருக்கும் போது, யாரும் நமக்கு எதிராகச் செயல்பட முடியாது. முயற்சி செய்தால், கண்டிப்பாக வெற்றி கிடைக்கும். தற்காலிகமாக ஏற்படும் பின்னடைவுகளை நினைத்து, மனதை வருத்திக் கொள்ளக்கூடாது. வானத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் மீது, யார் வேண்டுமானாலும் ஆசைப்பட முடியும். இந்த விடயத்தில் பாரபட்சம் கிடையாது.

நம் மனது எந்த விடயத்தை நினைக்கிறதோ, இறுதியில் அதைக் கண்டிப்பாக அடைந்துவிட முடியும். இவ்வாறு அந்தக் கடிதத்தில் எழுதியுள்ள அப்துல் கலாம், மாணவர்களை அன்புள்ள இளைய நண்பர்களே என அழைத்துள்ளார். (6)


# நாடாளுமன்றத் தேர்தல் 2010-ஏப்ரல் 8

## யாழ்ப்பாண மாவட்டம்-10

யாதார்த்த அரசியல்

சகல பிரிவினரின் ஆதரவுடன் நிலையான அரசியல் தீர்வை நோக்கிய இராஜ தந்திரப்பயணம்

மக்களின் நிம்மதியான வாழ்கை

இலங்கையினதும் சர்வதேசத்தினதும் நம்பிக்கைக்குரிய தலைவர்

மக்களின் விருப்பமறிந்து செயற்படல்

இந்தியாவின் பாணியிலான, அரசியல்முறை

ஆக்க பூர்வமான அபிவிருத்தி

சர்வதேச நம்பிக்கைக்குரிய கட்சி (TULF)

வன்முறையற்ற அரசியல் முறை



● என்றும் தளராத தலைமைத்துவம் ● நாளைய சமூகத்தின் வளமான வாழ்வு

## தமிழர் விடுதலைக் கூட்டணி



1 X 6

உங்கள் உரிமையின் சின்னம் உதய சூரியனுக்கே வாக்களியுங்கள்

(சி-4810)

# ராஜஸ்தான் அணி வெற்றி; பஞ்ஜாப் அணி பரிதாபம்

(மொகாலி)

சகல துறையிலும் ஜொலித்த ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று மொகாலியில் நடைபெற்ற லீக் சுற்றின் 19 ஆவது போட்டியில் சங்கக்கார தலைமையி லான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் வோர்ன் தலைமையி லான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியின் தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 183 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வோக்ஸ் ஆட்டமிழக்காமல் 24 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் பைசால் 38 பந்துகளில் (5 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 45 ஓட்டங்களையும் லூம்ப் 30 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 41 ஓட்டங்களையும் யூசுப்பதான் 28 ஓட்டங்களையும் எடுத்தார்.

பந்துவீச்சில் சிறிசாந்த், சிறிவஸ்தாவ மற்றும் சாவ்லா ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 19.1 ஓவர்களில் 152 ஓட்டங்கள் மாத்திரமெடுத்து 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் யுவராஜ் சிங் 18 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் அணித்தலைவர் குமார் சங்கக்கார 13 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 29 ஓட்டங்களையும் பொப்ரா 25 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தனா 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷோன் தைட் 3 விக்கெட்டுக்களையும் திரிவெடி, யூசுப்பதான் ஆகியோர் தலா 2 விக் கெட்டுக்களையும் முனாபட்டேல், அணித்தலைவர் ஷேன் வோர்ன் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 5 ஆவது போட்டியில் 2 ஆவது வெற்றியைப் பெற்று 4 புள்ளிகளை எடுத்தது.

இதேவேளை கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தான் விளையாடிய 5ஆவது போட்டியில் 4ஆவது தோல்வியைச் சந்தித்தது.

# இந்தியன் பிரிமியர் லீக்கின் மதிப்பு ரூபாய் 18 ஆயிரம் கோடியாக உயர்வு

## அணிகள் வரிசையில் சென்னை முதலிடத்தில்

(மும்பை)

ஐ.பி.எல். அமைப்பு வர்த்தக ரீதியாக அசுர வளர்ச்சி கண்டுவருகிறது. இதன் நிறுவன மதிப்பு இந்த ஆண்டு 18 ஆயிரம் கோடி ரூபாயாக (இந்திய ரூபாயில் பெறுமதி உயர்ந்துள் ளது.

இதில் இடம் பெற்றுள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் மதிப்பு அதிகபட்சமாக 220 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியன் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பு கடந்த 2008இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நிறுவன மதிப்பு ஆண்டு தோறும் உயர்ந்து வருகிறது.

தற்போதைய வருமானம் எதிர்காலத்தில் கிடைக்கும் வருமானம் சர்வதேச சந்தையில் உள்ள அந்தஸ்து போன்றவற்றை அடிப்படையாக கொண்டு நிறுவனத்தின் மதிப்பு கணக்கீடு செய்யப்படுகிறது.

இதன்படி கடந்த ஆண்டை விடவும் ஐ.பி.எல். அமைப்பின் மதிப்பு இரு மடங்காக உயர்ந்து 18 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.

**சென்னை முதலிடம்**

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இந்த ஆண்டு நிறுவன மதிப்பீடு பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது. இந்த அணியின் மதிப்பு அதிகபட்சமாக 220 கோடி ரூபாயை எட்டியுள் ளது.

பாலிவுட் நட்சத்திரம் ஷாருக்கானின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இரண்டா வது இடம் (ரூபாய் 210 கோடி) பெறுகிறது.

நடிகை ஷில்பா ஷெட்டியின் ராஜஸ்தான் றோய ல்ஸ் அணி மூன்றாவது இடத்தை (ரூபாய் 205 கோடி) பெற்றுள்ளது.

அடுத்த இடங்களில் தொழில் அதிபர் விஜய் மல்லையாவின் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் (ரூபாய் 190 கோடி), ரிலையன்ஸ் முகேஷ் அம்பானியின் மும்பை இந்தியன்ஸ் (ரூபாய் 185 கோடி), டில்லி டேர்டேவில்ஸ் (ரூபாய் 184 கோடி), நடிகை பிரீத்தி ஜிந்தா வின் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி (ரூபாய் 164 கோடி), டெக்கான் சார்ஜர்ஸ் (ரூபாய் 156 கோடி) அணிகள் உள்ளன.

**எகிறும் வருமானம்**

சமீபத்திய ஏலத்தில் கொச்சி (ரூபாய் ஆயி ரத்து 533 கோடி), புனே (ரூபாய் ஆயிரத்து 702 கோடி) ஆகிய இரண்டு புதிய அணிகள் அதிக விலைக்கு வாங்கப்பட்டன.

இதனால் ஐ.பி.எல். அமைப்புக்கு அதிரடியாக 3 ஆயிரத்து 235 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. ஒவ்வொரு போட்டிக்கும் விளம்பரங்கள் அதிகம் வருவதால் இந்திய விளம்பர உலகிற்கு மட்டும் ஆயிரம் கோடி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டிகளை நேரடியாக ஒளிபரப்பும் சொனி டிவிக்கு இந்த ஆண்டு விளம்பரம் மூலம் 700 கோடி ரூபாய் கிடைக்கவுள்ளது.

இப்படி எங்கு பார்த்தாலும் கோடிகள் புரள்வ தால் ஐ.பி.எல். மற்றும் அதன் அணிகளின் நிறுவன மதிப்பு பன்மடங்கு அதிகரித்துள் ளது.

சர்வதேச விளையாட்டு வர்த்தகத்தில் பாரம்பரியமிக்க இங்கிலீஷ் பிரிமியர் லீக் கால்பந்து அமைப்பின் நிறுவன மதிப்பு ரூபாய் 60 ஆயிரம் கோடியாக உள்ளது. ஐ.பி.எல். அமைப்பு ஆரம்பித்த மூன்று ஆண்டுகளில் 18 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளது ஆச்சரியம் அளிக்கும் விடயமே.

# திலீபனின் நினைவுத்தூபி தகர்ப்பு

## தமிழ்த்தேசியத்துக்கான மக்கள் முன்னணி கண்டித்து நேற்று அறிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபி தகர்க்கப்பட்டமையை தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி வன்மையாகக்கண்டித்து ள்ளது. இது தொடர்பில் அக்கட்சி வெளியிட்ட செய்தி வருமாறு,

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக காந்திய வழியிலே போராடிய ஈழத்துக் காந்தியே திலீபன். மருத்துவபீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு மருத்துவ மாணவனாக இருக்கும் பொழுது தமிழ் மக்களின் அவல வாழ்வு கண்டு அவர்களது நிம்மதியான வாழ்வுக்காக அகிம்சை வழியில் போராடிய உத்தம புருஷர்.

நீராகாரம் அருந்தாமல் மக்களுக்கு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தனது உடம்பை உருக்கி உரமாக்கியவர். இலங்கைத் தீவில் உள்ள ஒவ்வொரு தமிழ் மக்களின் நெஞ்சங்களிலும் தெய்வமாகப் பூசிக்கப்படும் உயரிய மனிதர்.

வணக்கத்திற்குரிய வகையிலேயே தமிழ் மக்களால் அவரது நினைவாக நிர்மாணிக்கப்பட்டிருந்த நினைவாலயம் பேரினவாத அரசின் கோரக் கரங்களால் சிதைக்கப்பட்ட செய்தி அறிந்து ஒவ்வொரு தமிழனது நெஞ்சமும் அக்கினிப் பிளம்பியாகியது.

மரணித்த மாவீரனது கல்லறையை காட்டுமிராண்டித்தனமாக சிதைத்த செயலை தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

தியாகதீபம் திலீபனின் நினைவுச் சுவடுகளை அழிப்பதன் மூலம் தமிழ் மக்களது உயிரோடும் உணர்வோடும் இரண்டறக் கலந்துள்ள உரிமை வேட்கையை சிதைத்துவிட முடியுமென பேரினவாத அரசு பகல் கனவுகாண்கின்றது. அரசு கற்பனை செய்வது போன்று தமிழ் மக்களது உரிமை வேட்கை ஒரு போதும் தணியப்போவதில்லை என்பதனை இச்சந்தப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றோம் என்றுள்ளது. (எ-5)

# சிறுபான்மை இன மக்களை ஈழவாதிகளாக குறிப்பிட முயற்சி

(கொழும்பு)

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் கூட பெரும்பான்மை சிங்களவர்களுக்கு மத்தியில் சிறுபான்மை இன மக்களை ஈழம் வாதிகளாக அடையாளம் காட்டுவதற்கு ஜனாதிபதி முயற்சிப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டியுள்ளார்.

கண்டியில் பூஜாபிட்டிய என்னுமிடத்தில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ரவூப் ஹக்கிம் உரையாற்றினார். அவர் மேலும் கூறியதாவது,

ஈழம்வாதிகள் இல்லாமல் சட்ட மூலங்களை நிறைவேற்றுவதற்கு தனக்கு அதிகாரங்களைத் தருமாறு ஜனாதிபதி கோரிவருகிறார். விடுதலைப் புலிகள் கொல்லப்பட்ட பிறகும் கூட ஜனாதிபதி யாரை ஈழம்வாதிகள் என்று குறிப்பிடுகிறார் என்றும் ரவூப் ஹக்கிம் இங்கு கேள்வி எழுப்பினார். (ச-5)

# எனது தீர்ப்பு தவறானது...

கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். சட்டம் அனைவருக்கும் சமனானதாக இருக்க வேண்டும்.

அனைவரும் சட்டத்திற்கு அமைய செயற்பட வேண்டும். சட்டத்தின் ஆதரவைத் தனது வழக்குத் தீர்ப்பு மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியதாகவும் முன்னாள் பிரதம நீதியரசர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி 2005 ஆம் ஆண்டு தாக்கல் செய்த சுனாமி நிதி மோசடி சம்பந்தமான வழக்கில் மகிந்த ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படவிருந்தார்.

அதன்போது அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்தார். மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகத் தெளிவான முறைப்பாடு இல்லை எனத் தான் கூறியதாகவும் அவருக்கும் சுனாமி நிதி மோசடிக்கும் சம்பந்தமில்லை எனத் தாம் தீர்ப்பு வழங்கியதாகவும் முன்னாள் பிரதம நீதியரசர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் வழக்கைத் தாக்கல் செய்த கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மகிந்த ராஜபக்ஷ 70 மில்லியன் ரூபாய் மோசடி செய்ததாகத் தனது மனுவில் குறிப்பிட்டிருந்ததாகவும் முன்னாள் நீதியரசர் குறிப்பிட்டுள்ளார். (எ-1)

# நாடாளுமன்றத் தேர்தல்...

அனுமதிக்கப்பட மாட்டாது.

எனினும் தேர்தல் கண்காணிப்புக்களில் ஈடுபடும் பவ்ரல் அமைப்பின் பிரதிநிதி ஒருவர், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையத்தின் (சீ.எம்.ஈ.வீ.) பிரதிநிதி ஒருவர் மற்றும் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி, சுயேட்சைக் குழு சார்பில் தலா இருவருக் குமே கண்காணிப்பில் தெரிவத்தாட்சி அலுவலரால் பெயர் குறிப்பிடும் நபர் ஒருவருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாக்குச் சாவடிகளாக இயங்கும் அரச அலுவலகத்தினுள் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு நேரங்களில் வந்து செல்வதற்கும் அனுமதி வழங்கப்படும்.

வேறு எந்த அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கோ அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கோ தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கோ வாக்களிப்பு நிலையங்களுக்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ நாயக்க இது தொடர்பாக தபால்மூல வாக்குப் பதிவுகள் நடைபெறும் அரச திணைக்களங்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வாக்கெடுப்பு நிலையங்களாகச் செயற்படும் இடத்திற்கு வெளியில் அல்லது உள்ளே அரசியல் கட்சியின், சுயேட்சிக் குழுவின் சுவரொட்டிகள், கட்அவுட்கள், கொடிகள் என எந்தவிதமான பிரசார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படக் கூடாது. இவற்றைக் காட்சிக்கு வைத்திருக்கவும் அனுமதி இல்லை. (எ-1,14)


பாராளுமன்றத் தேர்தல்-2010

சுயேட்சைக்குழு-10



- சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசு அமைந்திட
- தமிழர்களுக்கான அரசியல் துரோகத்தனத்தை ஒழித்திட
- தமிழ் சமூகத்தின் முதுகெலும்பான கல்வியை வளர்த்திட

உங்கள் ஆசிரியன் ப.கமல்தாசன் அவர்களுக்கு உங்கள் வாக்கு



X 6

இது முடிவல்ல தமிழர்களின் விடிவுக்கான ஆரம்பம்

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

நல்லூர் வாழ் இளைஞர்கள்

(க-4822)

# இலங்கை அரசுக்கான ஆதரவினை...

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நிபுணர்கள் குழு ஒன்றை நியமிப்பதற்கு முடிபெடுத்திருப்பது தொடர்பில் இலங்கைக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அணிசேரா நாடுகள் பான் மூனுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு அணிசேரா நாடுகள் அனுப்பி வைத்துள்ள இந்த எதிர்ப்புக் கடிதத்திற்கு ஆதரவு வழங்குவதாக பகிரங்கமாக அறிவிக்கவும் இல்லை, இலங்கைக்கு ஆதரவாக தனது கருத்தினை வெளியிடவும் இல்லை.

இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணைகள் விடயத்தில் மேற்குலகம் தற்போது மிகுந்த சிரத்தைக் காண்பிப்பதனால் இந்த விவகாரத்தில்தான் இனிமேலும் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அறிவித்து மேற்குலகினைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதில் இந்தியா மிகுந்த அவதானமாகச் செயற்படுகின்றது.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்த பல அணிசேரா நாடுகளே ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கான கடிதத்தில் கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கைக்கு மிகவும் நெருக்கமான நாடான லிபியாவின் பேச்சாளர் ஒருவரிடம் போர்க் குற்றங்கள் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்காமல் அந்தக் கேள்விக்கான பதிலை இலங்கையிடமோ அல்லது ஐ.நா விடமோ கேட்கும்படி கூறி நழுவியுள்ளார். (ச-5,14)

---

## ஐ.நா...

சென்றவேளை தன்னைச் சிங்களத்தில் நிந்தித்ததாகவும் தன்னை அவர்கள் நிழற்படம் பிடித்தார்கள் என்றும் கிருபாகரன் குறிப்பிட்டார்.

அந்தச் சிங்களவர்கள் ஜெனீவாவில் உள்ள இலங்கைத் தூதரகம் உட்பட்ட நிலையங்களின் சாரதிகளென்றும் அவர் குறிப்பிடுகின்றார். அந்தச் சமயத்தில் பிடிக்கப்பட்ட நிழற்படத்தைப் பிரசுரித்துக் கொழும்பில் இருந்து வெளிவரும் திவயின நாளேட்டில் தன்னை அவதூறு செய்யும் விதமான செய்தி ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது என்றும் கிருபாகரன் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் அமர்வுகளில் தான் கலந்து கொள்வதைத் தடுக்கும் முயற்சியே அதுவென்று கிருபாகரன் மேலும் கூறினார். (ச-5)

## லியாம்...

திலும் லியாம் பொக்ஸிற்கு நிதி அனுசரணை வழங்கவில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

2007 நவம்பர் மாதம் மற்றும் 2008/09 ஆம் ஆண்டுகளில் 4 தடவைகளும் லியாம் பொக்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக பி.பி.சி. உலக சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை லியாம் பொக்ஸின் இலங்கை விஜயத்திற்கு வெளிவிவகார அமைச்சு நிதி அனுசரணை வழங்கியதாகவும் அது வழமையான செயற்பாடு எனவும் வெளி விவகார அமைச்சின் அதிகாரி ஒருவரை ஆதாரம் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

---

## ஐ.நாவின்...

அரசுக்கு எதிரான போர்க் குற்றச் சாட்டுக்களுக்கான ஆதாரங்களைத் தருவதற்குத் தான் தயாராகவுள்ளதாக இந்த அரசியல் கட்சியின் தலைவராகச் செயற்படும் ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்படுவதற்கு முன்னர் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜனநாயக தேசிய முன்னணியில் போட்டியிடும் பிரதான கட்சியாக ஜே.வி.பி. உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)


NEW SCIENCE HALL & COLLEGE

2012 Batch

Mechanics

சனி, ஞாயிறு - 12.45 - 2.00.

ஆரம்பம் - 27.03.2010 By: R. குகன்

(950)





திறப்புவிழா அழைப்பிதழ்

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் பங்குனி மாதம் 11ஆம் நாள் இன்று (25.03.2010) வியாழக்கிழமை சுபநேரம் காலை 9.30 மணிக்கு இல.51, சிவன் வீதி, திருநெல்வேலியில்

BRIGHT INN

என்னும் ஸ்தாபனம் தொழிலதிபர் E.S.P. நாகரத்தினம் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். அத்தருணம் தாங்களும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.51, சிவன் வீதி, திருநெல்வேலி.

பணிப்பாளர் சபை, பிறைற் இன்.

(சி-4777)



வீடு தேவை

பூரணமாக்கப்பட்ட நிலையில் வகுப்புக்கள் நடத்துவதற்கு ஏற்ற வீடு தேவை. திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதிகள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0717429779

(951)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA

உங்கள் உரிமைக்காக
உழைத்தவருக்கே
உங்கள் வாக்கு....!

X

6



தொழிலதிபர்

ஈ.சரவணபவன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(சி-4821)



தபால் மூலம் வாக்களிக்கவிருக்கும்

பொருளியல் ஆசிரியர் திரு.S.வரதராஜன்

அவர்களின் பழைய மாணவர்களுக்கும்
மற்றும் தமிழ்த் தேசியத்தை நேசிப்பவர்களுக்கும்
ஓர் வேண்டுகோள்.
அச்சம் என்பது நம்மிடம்
தலை தூக்கி நிற்கும் வரை
நாம் அடிமையாகவே வாழ்ந்தாக வேண்டும்
அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை தமிழர் உரிமையடா
எங்கள் சமூக, பொருளாதார, அரசியல்
உரிமைகளைப் பெற்றுத்தரக்கூடிய
எங்கள் பொருளியல் ஆசிரியர் வரதராஜன்
அவர்கட்கு வாக்களிப்போம்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

-பழைய மாணவர்கள்



S.வரதராஜன்

-முதன்மை வேட்பாளர்-

(பிரபல பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)

X 10



அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

பாராளுமன்றப் பொது தேர்தல் 2010

தமிழ் தேசியத்தில் உறுதியாக நின்றவர்களை, தமிழீழ விடுதலைப்போராட்டத்தினை ஆதரித்தவர்களை தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து ஒழித்து கட்ட வேண்டும் என்ற பிராந்திய சக்திகளினதும் தென்னிலங்கை பேரினவாதிகளினதும் சதித்திட்டத்திற்கு அமையவே நாங்கள் த.தே.கூட்டமைப்பில் இருந்து தூக்கியெறியப்பட்டோம்.

இந்தச் சதித் திட்டத்தின் ஒரு அங்கமாகவே நாம் அரசிடம் விலைபோனவர்கள், அரசுடன் ஒப்பந்தம் செய்தவர்கள் என தமிழ் தேசியத்திற்கு விரோதமான பல சக்திகள் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகின்றன.

நான் இலங்கைக்கு வருவதற்கு அரசுடன் எந்த ஒப்பந்தத்தினையும் செய்யவில்லை. பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் குதித்ததும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறை அரசியல் தலைகீழாக மாறியது. இதனால் கதிகலங்கிப்போன அரச தரப்பு தமிழ் மக்களின் வாக்குகளை கவர்வதற்கு அதுவரை தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவந்த கடத்தல்கள், படுகொலைகள், வன்முறைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியது.

இதன் ஒரு கட்டமாகவே முட்கம்பிவேலிகளுக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்களில் ஒருபகுதியினர் விடுவிக்கப்பட்டனர். பத்திரிகையாளர் திஸநாயகம் போன்றோர் அவசர அவசரமாக விடுவிக்கப்பட்டார்கள். ஏ 9 வீதி திறக்கப்பட்டது. வீதித் தடைகள் நீக்கப்பட்டன. இந்த சாதகமான சூழ்நிலையிலேயே நான் வன்முறைகள் இன்றி நாடுதிரும்ப முடிந்தது.

எமது கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதால் எம்மை தோற்கடிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தனிப்பட்ட ரீதியில் எம்மீது சேறு பூசிவருகின்றனர். எம்மைப் பற்றிப் பொய்யான தவறான செய்திகளை மக்கள் மத்தியில் அலையாக பரப்பி வருகின்றனர். எனவே தமிழ்த் தேசிய உணர்வாளர்களையும் எனது ஆதரவாளர்களையும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்



செல்வராசா கஜேந்திரன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்

X 12

(சி-4819)

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி



பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

அடையாளங்களை ஆக்கிரமிக்கும்
சூழ்ச்சிகளை முறியடித்து
பூர்வீக வாழ்வை தொடர-நம்
உரிமைகளை உறுதிசெய்வோம்!

X

10 X



இலங்கைத் தமிழரசுக் கட்சி

சிவஞானம் சிறீதரன்

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரா) அதிபர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.